957

Regd. M. 1803. JULY 1926 Vol III—No. 12

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

YEARLY SUBS. INLAND RS. 2 FOREIGN RS. 2-8.

ஓம்

லக்ஷ்மி

26 AUG 1926
MADRAS

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர்: கே. எஸ். முத்தையா.

பத்திராசிரியர். க. ச. சுந்தரம் பிள்ளை.

மலர் ௫. | அக்ஷய ௵ ஆடி ௴ 1926 ஜூலை ௴ | இதழ் ௧௨.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	575
2.	திருவேகம்ப மாலை	576
3.	தியாகத்தின் பெருமை	577
4.	உணவாலடையும் உயிர் வலிமை ...	590
5.	எது அரிய பிறவி	598
6.	பானுபாய்	609
7.	நாடகம்	615
8.	இலக்கிய பஞ்சகம்	619
9.	கைத்தொழில்	620

லக்ஷ்மி துதி

இலங்குந் திருவருளே தஞ்சமா மென்று
இயம்பும் உண்மை

துலங்கும்படி யெனைக் காத்தருள்வாய்
பல் சுரக் கணமுங்

கலங்கும்படி பொருந் தானவ ராண்மை
கழிய வெல்லும்

பலங் குன்றிடா நெடு மாலகன்
மார்பிற் பழ கணங்கே.

நான் எல்லாம் வாங்கினேன்,

உங்களுக்கு ?

பச்சை மோதிரத்தின் மர்மம். ரூ. 1 0 0

அம்புஜாக்ஷி விலை ரூபாய் 2 0 0	தீனதயாளு விலை அணா 0 12 0
சரோஜனி விலை ரூபாய் 2 0 0	மர்மமுகி விலை அணா 0 12 0
ராஜ ராஜேஸ்வரி விலை ரூபாய் 1 8 0	பீமராவ் விலை அணா 0 10 0
ராஜ ராஜன் அல்லது காதலும் மையலும் விலை ரூபாய் 1 8 0	மதுராம்பாள் அல்லது மாய சந்நியாசி விலை அணா 0 12 0
ஜீஜாபாய் விலை ரூபாய் 1 4 0	மனோஹரி விலை அணா 0 8 0
பத்மலோசனி காபியை வெறுப்பது விலை அணா 0 12 0	மணவாழ்க்கையின் மர்மங்கள் விலை ரூபாய் 2 4 0
கோமளா விலை அணா 0 12 0	கருப்ப சாஸ்திரம் விலை ரூபாய் 1 8 0
கலா சுந்தரி விலை அணா 0 12 0	சரீர மர்ம சாஸ்திரம் விலை ரூபாய் 1 0 0

லக்ஷ்மி புஸ்தகசாலை,
தபால் பெட்டி 99, சென்னை.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

திவான் லொடபடசிங் பகதூர்

விலை அணா 12

இது புதிதாக நாவல் எழுதுவதில் கீர்த்தி வாய்ந்த வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டது. அநேக அழகிய சித்திரப் படங்களுடன் திகழ்வது. மிகவும் அருமையான நாவல்.

தமிழ்

சட்டப் புஸ்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ
ஸ்டாம்பு ரெஜிஸ்ட்ரேஷன், பலவிதப் பத்திரங்கள் எழுதும் மாதிரிகள் அடங்கிய விவகார சிந்தாமணி	2	8	லோக்கல் போர்டு ஆக்ட்	1	8
உயில் பாகம், வார்சுபாத்தியம் ஸ்திரீதன முதலிய துள்ள பெரிய ஹிந்து லா	2	0	இந்தியன் பினல்கோட்டு	3	0
சிவில் லா	3	0	ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம்	1	0
கிரிமினல் லா	3	0	டிரஸ்ட்டி ஆக்ட்	0	10
புது கிராம முனிசீப் சட்டம்	1	8	கிராம சுகாதாரம்	0	2
கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்	1	2	நில ஆக்கிரமிப்புச்சட்டம்	0	4
			கால நிர்ணய ஆக்ட்	0	8
			பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	0	10
			புதிய ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
			இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0
			ஸ்டாம்பு ஆக்ட்	0	12

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி 99,

மதராஸ்.

நாவல் எழுதுவதில் பெயர் பெற்ற

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார் B. A.

அவர்களால் எழுதியவை.

			ரூ.	அ.
மாயாவிநோதப் பரதேசி	1-ம் பாகம்	}	5	0
ஷை	2-ம் பாகம்	}		
விலாஸவதி	1-ம் பாகம்		1	8
ஷை	2-ம் பாகம்		1	8
மதனகல்யாணி	1-ம் பாகம்		1	8
ஷை	2-ம் பாகம்		1	8
ஷை	3-ம் பாகம்		1	8
பூர்ணச் சந்திரோதயம்	1-ம் பாகம்		1	12
ஷை	2-ம் பாகம்		1	12
ஷை	3-ம் பாகம்		2	0
ஷை	4-ம் பாகம்		2	0
சௌந்திரக் கோகிலம்	1-ம் பாகம்		1	8
மேனகா	1-ம் பாகம்		1	8
ஷை	1-ம் பாகம்		1	8
கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார்	1-ம் பாகம்		1	8
ஷை	2-ம் பாகம்		1	8
பாலாமணி அல்லது பக்காத் திருடன்			2	8
வஸந்த மல்லிகா			1	8
வித்தியாசாகரர்			1	4
திலோத்தமா			0	12
மாணிக்க வாசகர்			0	8
கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலை மகளும்			2	12
வஸந்த கோகிலம்			1	0
மாயா சுந்தரி			0	12

லக்ஷ்மி புத்தகசாலை,

தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

ஸ்ரீமத் பாகவதம்

(கிரந்த அக்ஷரத்தில்)

பூஜிப்பதற்கும், பாராயணஞ் செய்வதற்கும், உபயோகமுள்ளதும் ஸ்ரீ வேதவியாஸ மஹரிஷிகளால் இயற்றப்பட்டதும், பகவத் குணகணங்கள் நிறைந்ததும், சித்த சுத்தியைக் கொடுத்து மோக்ஷ சாம்ராச்சியத்தை அளிக்கக்கூடியதுமான ஸ்ரீமத் பாகவதம் 12-ஸ்கந்தங்களும் ஸ்ரீதரீயம், முக்கியமான இடங்களில் வீரராகவீயம், சந்திரிகை, முனிபாவப் பிரகாசிகை முதலிய நான்கு வியாக்கியானங்களுடன், உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகான கிரந்த லிபியில் டிம்மி 8-பக்க அளவில் சுமார் 420-பாரம் அதாவது 3360-பக்கங்கள் அச்சிட்டு, காலிகோ அல்லது பூஜார்கமான கித்தான் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. 12-ஸ்கந்தங்களின் விலை ரூபா 20.

ஒரே சமயத்தில் 5-செட் புஸ்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஒரு செட் புக் இனுமாய் கொடுக்கப்படும்.

புஸ்தகத்துக்கு ஆர்டர் செய்கிறவர்கள் புஸ்தகத்தின் கிரயத்தில் நான்கில் ஒரு பங்கு அட்வான்சாக அனுப்பவேண்டும். புஸ்தகம் அதிக பளுவாயிருப்பதால் தபாலில் அனுப்பினுல் செலவு ஜாஸ்தியாகும். ரெயில் மூலமாயனுப்பினுல் செலவு குறையும். ஆகையால், அவரவர்கள் தங்களிருப்பிடத்துக்கு சமீபமாயுள்ள ரெயில்வே ஸ்டேஷனை எழுதியனுப்ப வேண்டும்.

தேவையுள்ளவர்கள் எங்களிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி நெ. 99,

மதராஸ்.

எங்கள் சொந்தப் பிரசுரங்கள்.

மணிவடக் களவு :—பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஒரு அற்புதமான துப்பறியும் கதை.
விலை அணு 4.

பங்கஜம் :—இது ஒரு அழகிய சிறு கதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது.
விலை அணு 2.

குயில்மொழி :—ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மனவெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை.
விலை அணு 2.

எனது காங்கிரஸ் யாத்திரை :—இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோ ரெல்லாம் அவசியம் படித்தரிய வேண்டிய நூல். தற்கால்த் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை.
விலை அணு 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை :—நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மார்களுக்கு ஏற்றது.
விலை அணு 3.

பழமொழித் திரட்டு :—பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் சிறந்தவைகளை ஒன்ருகத் திரட்டி அச்சிடப் பெற்றது.
விலை அணு 3.

மனோஹரி :—இது பெயருக் கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுகவாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப் பட்டுள்ளன.
விலை அணு 8.

நடராஜப் பத்து :—நடராஜப் பத்து, நடராஜர் பதிகப்பஞ்சகம், தில்லை நடராஜர் பதிகம், இம்மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்திபிரித்து கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பட்டது.
விலை அணு 2.

கந்தரலங்காரம் :—இதில் கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம் சத்ருசங்கார வேற்பதிகம், அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி இருக்கிறது. கிளேஸ் கடிதம்.
விலை அணு 4.

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

நாவல்கள்

ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால்

இயற்றப் பெற்றவை.

	ரூ.	அ.		ரூ.	அ.
ராஜாம்பாள்	0	12	ஆனந்த கிருஷ்ணன்	0	12
சந்திரகாந்தா	0	12	வரதராஜம் முதல் பாகம்	1	0
மோகன சுந்தரம்	0	12	இரண்டாம் பாகம்	1	0
ராஜேந்திரன்	1	0			

ராவ்சாகிப் T. M. பொன்னுசாமிப் பிள்ளை அவர்கள்

இயற்றிய நாவல்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
கமலாக்ஷி	1	12	சிவஞானம்	1	4
ஞானம்பிகை	1	8	ஞானசம்பந்தம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8	விஜய சுந்தரம்	2	8

S. S. அருணகிரி நாதரால் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
குமுதரஞ்ஜனி or கொலையும்களவும்	0	12	வஸந்தா	1	12
கனகமணி அல்லது கள்ளச் செயல்கள்	2	12	பத்மாக்ஷி	2	0
			சரோஜனி	2	0
வீரகேசரி	1	12	அமிர்தகுமாரி	1	4
இராஜ ராஜேஸ்வரி	1	8	அமரநாதன்	1	8
அமிர்த சாகரன்	1	8			

பாய் பரமானந்தன் விலை ரூபாய் **1 0 0**

தேச பக்தியைப் புகட்டும் ஓர் சிறந்த நவீனம். ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத புஸ்தகம் இது.

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி நெ. 99,

மதராஸ்.

வேதாந்த சித்தாந்தப் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
ஸ்ரீ பகவத் கீதை வசனம்	1	8
,, விசார சாகரம்	3	4
,, விருத்திப் பிரபாகரம்	5	0
பிரபோத சந்திரோதய வசனம்	1	0
ஒழிவி லொடுக்கம் உரையுடன்	1	4
பிரபுலிங்க லீலை வசனம்	1	0
அகம்புர ஆராய்ச்சி விளக்கம்	1	4
மாயா வாத சைவ சண்ட மாருதம்	1	0
ஸ்ரீ சங்கர விஜயம்	1	4
,, ராமாநுஜ விஜயம்	2	0
,, விவேகானந்த விஜயம்	1	12
ஷெடியார் விரிவான சரித்திரம்	2	0
பெரிய புராண, திருவிளையாடல் புராண வசனச் சுருக்கம்	1	4
ஆத்திசூடிப் புராணம் உரையுடன்	2	0
ஸ்ரீ அருணாசல புராண வசனம்	1	8
அரிச்சந்திரபுராண வசனம்	1	8
சிவக்ஷேத்திர விளக்கம்	1	8
தேவார திருவாசகத் திரட்டு	0	8

	ரூ.	அ.
அகஸ்தியர் தேவாரத் திரட்டு உரை	1	4
தண்டியலங்காரம் உரையுடன்	1	12
கல்லாடம் மூலமும் உரையும்	3	0
நளவெண்பா மூலமும் உரையும்	1	8
பிங்கல நிகண்டு மூலமும் உரையும்	2	8
திருக்குறள் மூலம்	0	8
நாலடியார் மூலமும் உரையும்	2	0
ஆத்திசூடி வெண்பா உரையுடன்	1	0
திருவள்ளுவர் சரித்திரம்	3	0
திலகர் விசாரணை (சரித்திரத்துடன்)	0	12
ஸ்ரீ விவேகாநந்தர் சரித்திரம்	2	0
,, ராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரம்	2	0
,, சங்கராசாரியார் சரித்திரம்	1	4
,, ராமாநுஜர் சரித்திரம்	2	0
,, மத்வாசாரியர் சரித்திரம்	1	0

ஆனந்த ராமாயணம்

(13 அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.)

இதில் இலட்சுமண சக்தி, சரசேதுபந்தனம், ஸ்ரீராமாக்ஷையின் மகிமை, குசலவர்களின் பராக்ரமம், பாபங்களின் பிராயச்சித்தம், ஸ்ரீராம நாம மகிமை, ஸ்ரீராம நாமத்தை ஜபிக்கும் முறைமை இவை போல்வன இதில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; அன்றியும் சீதா தேவியின் பாதிவ்ருத்திய மகிமையும் பிரானின் ஏகபத்தினி விரத மகிமையும் வெகு நன்ருய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா **6 0 0**

லக்ஷ்மி புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ. 99, மதராஸ்.

விஜயா - விமலா

இரு சகோதரிகளின் கதை

விலை அணா **12**

ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த விஜயா - விமலா என்ற இரு சகோதரிகளுள் இளையவளான விஜயா காதல் கொண்டு ரத்தினசாமியைக் கலியாணம் செய்ய எண்ணித் தன் சகோதரியாகிய விமலாவை மோசம் செய்து, அவளை மணப்பதும், பிறகு தன்னுடைய கௌரவத்தால் தன் சகோதரியை பணிப் பெண்ணாக அமர்த்தியதும், சகல உண்மை விஷயங்களையும் ரத்தினசபாபதி அறிந்ததும், தான் காசி முதலிய இடங்களுக்குக் கர்ப்பத்தோடு ஓடுவதும், பார்க்கொணாத கஷ்டங்களை அனுபவிப்பதும், கடைசியாக மதுரையில் வந்து சுகித்து வாழ்வதும், படிப்பதற்கு ஓர் உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கும்.

சுவர்ணாம்புஜம்

அல்லது

பதி பக்தி

விலை அணா **8**

இந்து ஸ்திரீகளுக்கு யென் எழுதப்பட்ட இப்புஸ்தகம் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. தன் கணவனே தனக்குத் தெய்வம் என நன்கு விளக்கிக் காட்டும். இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் கற்றுணர்ந்தால் மிகவும் நலமா யிருக்கும்.

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி நெ. 99,

மதராஸ்.

ARE YOU INTERESTED

IN

UPPER CLOTHS OF FASHION ?

1. சைனு ஸில்க்.

அசல் பட்டு, இமிடேஷன் அல்ல. அழகான குஞ்சம், துவைக்கத் துவைக்க பளபளப்பு அதிகமாகும். வண்ணானுக்குப் போட்டு சலவை செய்யலாம். இதை வாங்கி உபயோகித்த ஓர் உத்தியோகஸ்தர் என்ன சொல்கிருர் என்பதை கவனிக்கவும்.

"தாங்கள் அனுப்பி யிருந்த சைனு ஸில்க் நேர்த்தியா யிருக்கிறது. நூல் துப்பட்டாவை விட விலையில் மலிந் திருப்பதுடன், உபயோகத்தில் மிகவும் சிறந்ததா யிருக்கிறது. வண்ணான் உதவி யில்லாமலே தினசரி சோப்புப் போட்டு உபயோகிக்கிறேன். திரும்ப மூன்று அனுப்பவும்."

5 முழம் × 2 அகலம் பட்டு 1-க்கு ரூபா **4-8-0.**

2. ஷமினிஸோ அங்கவஸ்திரம்.

ரோஸ், பச்சை, புளூ, ஊதா முதலிய 15 விதக் கலர்கள். குஞ்சம் கட்டியது.

அகலம் 27 இஞ்சு பட்டு 1-க்கு விலை ரூபா **3-8-0.**

3. அமெரிக்கன் (கலர்) ஸில்க்.

5 முழம் × 44 இஞ்சு சலவைக்குப் பளபளப்பா யிருக்கும். கலர் உத்திரவாதம். அழகாக குஞ்சம் கட்டியது. எல்லாக் கலர் களிலும் கிடைக்கும்.

இன்றே தேவைக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூபா **6-8-0** தான்.

4. அமெரிக்கன் வெள்ளை அங்கவஸ்திரம்.

குஞ்ச மில்லாதது. முகத்தலைக்கு, கருப்பு, சிகப்பு கம்பி போட்டது. சலவைக்கு வெகு நேர்த்தியா யிருக்கும்.

விலை ரூபா **6-12-0.**

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

B

லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத்திரண்டாவதாண்டு இப்பொழுது நடக்கிறது. பாலி சு. நெல்லையப்ப பிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதாரராகாவிட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனாம்.

'லோகோபகாரி'

பத்திரிகாலயம்,

கோமளேசன் பேட்டை,

சென்னை.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக்கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3.

தபாற் செலவு வேறு.

சொற்பக் காபிகளே கைவசமுள்ளன. முந்துங்கள்.

நமது புதிய பிரசுரங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
காசி அல்லது புண்ணிய பூமி ...	0	12	நடராஜப்பத்து ...	0	2
மனோஹரி ...	0	8	பங்கஜம் ...	0	2
பரிமளா ...	1	0	குழில் மொழி ...	0	2
மணிவடக்களவு ...	0	4	கனவுப் பொடி ...	0	2
கந்தரலங்காரம் ...	0	4	எனது காங்கிரஸ் யாத்திரை ...	0	3
தாலாட்டுக்கோவை ...	0	3	வர்த்தக யுக்தி ...	0	12
பழமொழித்திரட்டு ...	0	3	கண்ணகியின் சாபம் ...	0	8

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓர் வேண்டுகோள்

நேயர்களே!

வந்தனம், நாங்கள் சுமார் மூன்று வருட காலமாக நடத்திவரும் "லக்ஷ்மி புஸ்தகசாலை"யில் இப்பொழுது ஏராளமாக எல்லா விதத் தமிழ்ப் புஸ்தகங்களும் வைத்திருக்கிறோம். ஆகையால் தங்களுக்கு வேண்டிய தமிழ் நாடகப் புஸ்தகங்கள், நாவல்கள், இராஜீய நூல்கள், மத சம்பந்தமான புஸ்தகங்கள் இன்னும் வேண்டிய இதர புஸ்தகங்களுக்கும் எங்கள் புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்யுங்கள்; உடனுக்குடன் அனுப்பிக் கொடுக்கிறோம்; வெளியூர்களிலுள்ள சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் ஆர்டர் அனுப்பும் சமயம் தாங்கள் விரும்பும் தொகை அட்வான்ஸ் அனுப்பவேண்டும். ஆகையால் இது முதல் உள்நாடு, வெளிநாடுகளிலுள்ள நமது சந்தா நேயர்களும் மற்றுமுள்ள நேயர்களும் நமது லக்ஷ்மி புஸ்தக சாலைக்கே ஆர்டர் செய்வீர்களென்று நம்புகிறோம்.

புஸ்தகசாலை விலாசம் — மானேஜர்

லக்ஷ்மி புஸ்தகசாலை — லக்ஷ்மி ஆபீஸ்.

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

கலியின் கோலாகலம்

விலை ரூபா **1—0—0.**

இது ஒரு சகோதரியால் எழுதப் பட்டதினாலேயே இதன் அருமைப் பெருமையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. தெள்ளிய தமிழ் நடையைக் கொண்டு, மனதை ரமிக்கச் செய்யும் நாவல் இதுதான். கதையின் சில பாகங்கள் ஓயாமல் சிரிப்பை யுண்டாக்கும் விதமாய் எழுதப்பட்டிருக்கின்றன. கதைப் போக்கு படிப்பதற்கு வெகு இன்பகரமா யிருக்கும். இந்தப் புஸ்தகம் ஏராளமாய் விற்பனையாகிறது. "கலியின் கோலாகலம்" என்ற பெயரைப் பார்த்தவுடனேயே இந்தப் புஸ்தகத்தி லடங்கி யுள்ள விஷயங்கள் எப்படி யிருக்கு மென்பதை நீங்கள் யூகித்து அறிந்து கொள்ளலாம். மிஞ்சியுள்ள பிரதிகள் கொஞ்சமே. ஆகையால் உடனே முந்துங்கள்.

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி 99, மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210260
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாடுகளுக்கு வருடம் 1-க்கு இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2 0
வெளி நாடுகளுக்கு வருடம் 1-க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ்,	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 3.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10-க்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்பட மாட்டாது. மானேஜர்.

நமது லக்ஷ்மி கிடைக்கும் இடங்கள்

[தனிப் பிரதி அணா 3-வீதம் பெற்றுக் கொள்ளலாம். சந்தா நேயராகச் சேர விரும்புபவர்கள் கீழ்க் கண்ட 2,3,4,5,6, லக்கமிட்ட விலாசக்காரர்களிடமும் V.P. ஆர்டராவது, ரூ. 2. செலுத்தியாவது தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்]

1. மதராஸ் சென்டரல் ஸ்டேஷனிலும், மற்றுமுள்ள தென்னிந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின் பாதம் (Higginbotham) புத்தக சாலைகள்.
2. K. S. முத்தையா அண்டு கம்பெனி, திருநெல்வேலி ஹைரோடு, திருநெல்வேலி.
3. S. சுப்பிரமணியம் செட்டியார், நெரியளைத் தோட்டம், நிவிட்டிக்கொளை, சிலோன்.
4. T. S. சேது மாதவ ராவ், ஆர்ய வைசிய காசுக்கார ஸரஸ்வதி சங்கம். 94, மேலச் செட்டித் தெரு, தெற் காவணி மூலவீதி, மதுரை.
5. C. லக்ஷ்மணன் 18, கோவிந்த முதலி தெரு, கஸ்பா வேலூர்.
6. S. K. சாமி, கமிஷன் எஜண்டு ELA. Po-(பர்மா.)

பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

திருவேகம்ப மாலை

ஊருஞ் சதமல்ல ; உற்றார் சதமல்ல ; உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல ; பெண்டிர் சதமல்ல ; பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல ; செல்வஞ் சதமல்ல ; தேசத்திலே
யாருஞ் சதமல்ல ; நின்றாள் சதங் கச்சி யேகம்பனே !

பொருளுடை யோரைச் செயலினும், வீரரைப் போர்க் [களத்தும்
தெருளுடை யோரை முகத்தினுந்தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தில் அருளில் அன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங் கச்சி யேகம்பனே !

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத் தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின் றார்; துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டார் ; அவரை யிம் மாநிலத்தில்
இருத்திக்கொண் டேனிருந் தாயிறை வா! கச்சி யேகம்பனே !

வாதுக்குச் சண்டைக்குப் போவார் ; வருவார் ; வழக்குரைப் [பார் ;
தீதுக் குதவியுஞ் செய்திடு வார் ; தினந் தேடியொன்று
மாதுக் களித்து மயங்கிடு வார் விதி மாளுமட்டும் ;
ஏதுக் கிவர்பிறந் தார் ? இறை வாகச்சி யேகம்பனே !

ஓயாமற் பொய்சொல்வர் ; நல்லோரை நிந்திப்பர் ; உற்றுப் [பெற்றத்
தாயாரை வைவர் ; சதியாயிரஞ் செய்வர் ; சாத்திரங்கள்
ஆயார் ; பிறர்க்குப காரஞ்செய் யார் ; தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன ? காண்கச்சி யேகம்பனே !

தியாகத்தின் பெருமை

(ஸ்ரீமதி. ஆதிலக்ஷ்மி, எழுதியது.)

கீர்த்தியையும் பலனையும் ஆதாரவாகக்கொண்டே ஒவ்வொரு தியாகமும் தோன்றுகிறதென்று நாம் கூறும்போது படிப்பவர்களுக்கு எதிர் மறையாகத் தோன்றலாம். ஏனெனில் கீர்த்தியையும் பலனையும் விரும்பாத தானமே தியாகமென்று கூறப்படும். கீர்த்தியையும் பலனையும் விரும்பிச் செய்யப்படும் தானம் தியாக மாக மாட்டாதென்று உலக வழக்த மிருக்கிறது.

ஆனல் கீர்த்தியையும் பலனையும் விரும்பாமல் யாதொரு தியாகமும் செய்ய முடியாதென்பது எமது கொள்கை. தியாகம் செய்பவன் அதன் பலனை எதிர் பார்க்காமல் தியாகம் செய்ய மனதில் நினைப்பதே அசாத்திய மாகிறது. அத் தியாகத்தின் பலன் தனக்கின்றிப் பிறர்க்காகும்பொழுது தான் தியாகமென்ற பெயரை அவ்வினை பெறுவதாகும். உதாரணமாக அரிச்சந்திரன், தன் சத்திய விரதத்தைக் காக்கும்பொருட்டு புரிந்த தியாகங்கள் அக்காலத்தவர்க்கேயன்றி எக்காலத்திலும் மனித சமூகத்திற்கு வாக்கின் பரிபாலனத்தைக் காக்கவேண்டியது ஒவ்வொருவனின் கடமை என்பதைக் காட்டப் பயன்படுவ தாயிற்று. இங்கு அரிச்சந்திரனது கடமை, பலனை எதிர்ப்பார்த்ததாயினும் அவனையறியாது உலகத்தாருக்குச் சத்திய விரதத்தின் பொருட்டு வழிகாட்டுவ தாயிற்று.

கடைசியாக அவன் விஸ்வாமித்திரனல் பரீக்ஷிக்கப் பட்டபோது,

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி நமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்ருன்
மதியிழந்து தன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"

என்று கூறிய மறுமொழி அவனது கடமையிலுள்ள வைராக்கியத்தால் அவனது தியாகம் உலகத்தில் என்றும் நிலை நிற்பதாயிற்று. அரிச்சந்திரனது இப் பெருங்குணம் அவனுக்கு இயற்கையாக யுள்ளதோ அன்றிக் குலக் கொள்கையோ வென்பதை நாம் இங்கு அறிய முடியா விடினும் ஓர் அரசனுகிய ஜனத்தலைவன் தனது ஆட்சிக் குட்பட்ட ஜனசமூக வாழ்க்கையின் நல்லொழுக்கத்திற்குத் தானொரு உதாரணமாக இருந்து காட்டும்பொருட்டு இவ் வுயர்ந்த சத்தியாக்கிரகத்தைத் தன் கடமையாகக் கொண் டிருந்தான் என்று நாம் ஊகிக்கவேண்டிய தாகிறது.

இஃது இவ்வாருக தியாகம் காலத்தையும் இடத்தை யும் அவசியத்தையும் பொறுத்தே பெரிது, சிறிது என மதிக்கப்படுகின்றதே யன்றித் தியாகத்தின் அளவைக் கொண்டு மதிக்கப்படுவதில்லை யென்பதை மறக்கவேண்டாம். எவ்வாறெனில் வள்ளுவர் கூறுவதுபோல்,

காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞானத்தின் மாணப் பெரிது. (குறள்)

என்பதனுல் உதாரணமின்றி உணரக் கிடக்கின்றது.

அன்றியும் தியாகத்தின் விலை அதற்குக் காரணமாகிய பொருள், வினை, இவைகளின் அளவைக் கொண்டு மதித்தற் பாலதன்று. அத்தியாகத்தினு லுண்டாகும் பலனைக் கொண்டு மதித்தற் பாலதாகும். மிகுந்த பொருட் சேதத் தாலும் உயிர்ச் சேதத்தாலும் உண்டாகும் பலன் அற்பமே யாயினும் அஃது எண்ணிய காரியத்தின் ஓர் அளவே யாகையால் சிறந்த வெற்றிக்குச் சமானமே யாகும்.

தியாகமானது தியாகிக்கு இரண்டு வகைகளில் பயன் படுத்திக்கொள்ளத் தக்கதா யிருக்கிறது. அல்லது வேண்டற் பாலதன்றி வெறுப்பதாயினும் பலனளிப்பதாகிறது. எனி னும் அவை மனிதனது கொள்கைகளைப் போன்று நற்பய னைத் தரத்தக்கதென்றும் தீய பலனைத் தரத்தக்கதென்றும் இரு வகைத்தாகும். நற்பலனைத் தரத்தக்க தியாகங்களையே விவேகிகள் "தியாக"மென் றழைப்பார்கள். தீய பலனைத் தரத்தக்க தியாகங்களை "மூடவினை" என்றுதான் அறிஞர் கள் கூறுவர். இராவணனும் துரியோதனனும் தாங்கள் செய்த யுத்தங்களால் தருமத்திற்கும் தங்க ளாட்சிக் குட்

பட்ட ஜன சமூகத்திற்கும் அழிவையும் அபகீர்த்தியையு முண்டாக்கியதால் தாங்கள் கொண்ட கொள்கையைப் பிடிவாதத்துடன் நிறைவேற்றினவர்களே யெனினும், உண்மைத் தியாகிகளாக மாட்டார்கள். ஆனால் அவர்களது கொடுங் குணங்களும் கொடுங்கோன்மையும் அழிய அவர்களே காரண பூதர்களாக விருந்தமையால் இராமனதும் பாண்டவர்களதும் நற்பயனைத் தரத்தக்கத் தியாகங்களுக்குப் பலன்களை அளிப்பனவாக மட்டும் நின்றன.

இனி சமத்துவமான தியாகங்களைப் பற்றி ஆராய்வோம். எப்பொழுதும் சமத்துவமான தியாகங்கள் நன்மையின் பொருட்டும் அல்லது தவத்தின் பொருட்டும் தமது கடமையாகச் சிறிதும் சுயநலங் கருதாது தியாகம் செய்வதேயாகும். யுத்தவீரர்கள் தங்களுயிர்களைச் சேனாதிபதியின் ஆக்கினைக்காக மட்டும் தியாகம் செய்து விடுவது அறிவற்ற தியாகமே யாகும். ஆனால் யுத்தவீரர்கள் சேனாதிபதியின் ஆணையோடு தேசாபிமானமும் மேற்கொண்டு தியாகம் செய்வது விவேகமான தியாக மாகலாம். தன்னை அல்லது தன் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தலைவனது ஆணையின்றித் தானேபுரியும் தியாகம் மிகவும் சிரேஷ்டமான தென்று கூறலாம். ஆபத்துக் குட்பட்ட ஜீவராசிகளையும் குழந்தைகளையும் பெண்களையும் விருத்தாப்பியர்களையும் திடீரென்று தன் உயிரையுங் கொடுத்துக் காப்பாற்றுவது தெய்வத் தன்மை யமைந்த தியாகங்க ளாகும், ஆனால் இவைக ளனைத்தும் தலைப்பில் கூறியபடி சமத்துவமான தியாகங்கள் அன்று, சமத்துவமான தியாகம் கேவலம் நன்மைகளை மட்டும் கோறியதாய்த் தீமைகளின் முடிவான நாசத்தைக் கருதித் தியாகிப்பதாகும்.

உதாரணமாக ஸ்ரீ ராமன் தண்டகாரண்ணியத்தை யடைந்தபோது அவனைக் கண்டு ஆநந்தமடைந்து தபசிகள் இராவணாதி கொடுங்கோல் புரியும் அரக்கர்களை இராமன் வென்று தங்களைத் துன்பத்தினின்றும் விடுதலை புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டபொழுது இராமன் மகரிஷிகள் தங்கள் சாபத்தினால் எதிரிகளைச் சாம்பலாக்கும் சக்தி வாய்ந்திருக்க அரக்கர்களின் கொடுமையினின்று நீங்கள் ஏன் உங்களைப் காப்பாற்றிக் கொள்ளாது என்னை வேண்டுவதென வினவினன். தவத்தின் வல்லோர் நாங்கள்

மோக்க நோக்கங்கொண்டு தவத்தால் கோபத்தைவென்று வாழ்வோ ராதலின் எங்களைக் காக்கும்பொருட்டு நீயே கொடுங்கோ லரக்கரைக் கொல்லக் கடவாய். அது உன் கடமையேயாகும். அதன் பொருட்டே நீ வந்திருக்கின்றாய். அன்றியும் நீ க்ஷத்திரிய னாதலின் என்றனர். எனது அர சாட்சியின் பொருட்டு மட்டு மன்றித் தருமத்தின் பொருட் டும் நீதியின் பொருட்டும் எனது நாட்டின் பொருட்டும் நான் உங்கள் ஆசீர்வாதத்தால் அந்தக் கொடுங்கோ லரக்கரை யழித்துக் காப்பது என் கடமையே யாகும். நானே செய் கிறேன் நீங்கள் அஞ்ச வேண்டாம் என்றனன். தவத்தோர் அரச குமாரனது தியாகத்தைப் புகழ்ந்து க்ஷத்திரிய புத்திர னுன உனது தியாகம் கொடுங்கோ லரக்கரின் கள்ள வல்ல மையை யழிக்கத் தகுதியுள்ளதே யாகும் செய்து காப்பா யாகவென ஆசீர்வதித்தனர்.

இங்கு இராமனது தியாகம் கொடுமையின் வல்ல மைக்குத் தகுதியுள்ள தாயும், தியாகத்தின் பலனுல் நன்மை யன்றித் தீமை பயக்காம லிருப்பதையுங் காண்க. இதுவே "சமத்துவ தியாக மாகும்." எனெனில் தண்டகாரண் யத்தின் முனிவர்கள் கேவலம் தங்கள் ஆத்மாக்களே மோக்ஷ பதவியை யடைய வேண்டுமென்று சுயநலங் கருதித் தவம் புரிவோ ராவர். ஆகவே அவர்கள் கொடுங்கோல் அரக் கரை அழிக்கக் கொடுக்கும் சாபம் அன்னோரைக் காக்கும் பலனை மட்டும் கொடுப்பதா யிருப்பினும் ஒரு வகையில் சுய நலங்கருதியே யாகும். இராமனது தியாகமோ சகல ஜீவராசி களையும் சகல ஆத்மாக்களையும் தாவர ஜங்கமங்களையும் தரு மத்தையும் காப்பாற்றுவதையே கடமையாகக் கொண்ட தாகும்; ஆகவே இராமனது தியாகம் "சமத்துவ" தியாக மாகிறது.

உண்மையான சமத்துவ தியாகம் சில சமயங்களில் கடமையைத் தாண்டி விடுகின்றது. இதைத் தற்காலத்திலும் அடிக்கடி பார்க்கின்றோம். முற்காலத்தில் கடவுட் டன்மை யின் பொருட்டு மட்டும் உபயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. உதாரணமாகப் பாரதப் போர் நடந்தபோது பகவான் கிருஷ்ணன் விருத்தாப்பிய உருவந் தரித்து யுத்த களத்தில் இரத்தம் வடியப் போர் புரிந்து களைத்து ஆச னத்தில் சாய்ந்து கிடக்கும் கர்ணனிடம் சென்று, அவன

தியாகத்தின் பெருமை

புரிந்துள்ள தருமங்க ளனைத்தையும் தானமாக வேண்டின தும், கர்ணன் அவ்வாறே மன மகிழ்ந்து தனது புண்ணியங் கள் முழுவதையும் கிருஷ்ணனுக்கு அம்பின் அம்பால் தாரை வார்த்துத் தத்தம் செய்து கொடுத்தான். தானம் வாங்கிய கள்ளன் தன் உருவத்தைக் காட்டிக் கர்ணனை ஆனந்திப்பித்து அவனை ஆசீர்வதித்துச் சென்றனன். இவ் வற்புத சம்பவத்தைத் தகுதியான அழகிய சொற்களாக இனிப்புடன் எழுதிக்காட்ட அகராதியிற் சொற்க ளிருப் பினும் எமக்கு வல்லமை யில்லை யாதலின், கீழே கண்ட அமுத கவிகள் நன்கு விளக்குவ தாகும்.

தாண்டிய தரங்கக் கருங்கட லுத்த தரணியிற்
றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன் மேருவி
னிடைத் தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன் இயைந்த
தோன் றிக் கணத்தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச் சுடர்தரத்
தோன்றிய தோன்றல்.

ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை அகத்ததோ
புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும் பக்குவந்
தன்னில் வந்திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்து
முதவினேன் கொள்க நீயுனக்குப்
பூவில் வா ழ்பனு நிகரல னென்றூற்
புண்ணிய மிதனினும் பெரிதோ.

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக் கைப்புன
லுடன் றருகென்ன
அவன்னவ னிதயத் தம்பின்வாயம் பா லளித்தலு
மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுலகமு முடன் கவர்ந்தோன்.

இங்கு கர்ணனது தரும வல்லமை அருச்சுன னுடைய வெற்றியை அழிப்பதால் அவ்வெற்றிக்குத் தடைவரின் உல

கில் நிலை நிறுத்தவேண்டிய தரும ஸ்தாபனம் அசாத்திய மாவதைக் கண்டு, தடைபுரியும் கர்ணனுடைய தரும பலனைத் தானமாகப் பெற்றுத் தரும யுத்தத்தை விஜயமுறச் செய்வதற்காக ஸ்ரீ கிருஷ்ணன் தன் கடமையைத் தாண்டிக் கர்ணனிடம், தானம் வாங்கி அறநெறி மாறியே அறத்தைக் காப்பாற்றியதை அறிவுடையோர் ஆழ்ந்து கவனித்தல் வேண்டும். கர்ணனது தியாகம் எவ்வளவு சமரசமுள்ளதோ அவ்வளவு சமரசமும் நியதியும் கிருஷ்ணனுடைய தருமத்தின் தியாகத்திலு மிருந்ததால் இந்த இரண்டும் "சமரச தியாக மா" கின்றன.

இதுபோலவே சக்கிரவர்த்தி 'சிபி,' சக்கிரவர்த்தி 'மஹாபலி', 'மஹரிஷி' 'ததீசி' முதலியவர்களின் தியாகங்களும் சர்வ க்ஷேமத்திற்காகச் செய்யப்பட்டனவாகும். நம் நாட்டில் "தியாகம்" நம் வாழ்வுடன் பிணிக்கப்பட் டிருந்தது. பிரத்தியட்சம். தற்போதும் இப்பிணிப்பை எவரும் பார்க்கலாம். இது நிற்க.

இனித் தற்கால தியாகங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சற்றேறக் குறைய சென்ற இரு நூற்றாண்டுகளாக உலகத்தில் தியாகம் "உண்மை யுருவம்" "கள்ள உருவ" மென இரு பெயர்களைக் கொண்டு சஞ்சரித்து வருகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் தியாகம் மிகுந்த உண்மை யுருவுடன் எவ்வளவோ அருமையும் பெருமையும் வாய்ந்த நன்மைகளைச் செய்திருப்பதையும் செய்து வருவதையும் நாம் சரித்திர மூலமாக அறிந்தும் பிரத்தியட்சமாகத் தெரிந்தும் பொறாமையுடன் ஆநந்தப் படுகிறோம். அந்நாடுகளின் கைத்தொழிற் பெருமைக்கும், கல்வி ஆராய்ச்சிக்கும் விஞ்ஞான விருத்திக்கும் இந்த உண்மைத் தியாகங்களே காரணங்கள். இந்தத் தியாக வித்தை அந்த ஐரோப்பிய நாடுகளின் அமைப்புகளுக்கும் ஜன விவேகத்திற்கும் தகுதியற்றதாக விருப்பினும், தருமத்தையும் ஜீவ தயையும் ஆதரவாகக்கொண்டு வளராவிடினும், அந்நாட்டாரின் தேசாபிமானமே அடிப்படையாக நிற்கின்றது. இந்தத் தேசாபிமானமாகிய பெருநெருப்பு நன்றாகப் பற்றி எரிய ஆரம்பித்திருக்கும் ஒவ்வொரு ஐரோப்பிய தேசத்தாரும் தங்களு

டைய அபிவிருத்திக்குத் தடையாக விருந்த மதம், அறியாமை, சோம்பல் முதலிய தடைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அல்லது மாற்றிப் பலஹீனப்படுத்திவிட்டது. ஆகவே தேசாபி மானத்தா லெழுந்த தியாகம் நன்மைகளுக்கு மேல் நன்மைகளை யுண்டாக்கிக்கொண்டு வளர்ந்து வருகின்றது. அவ்வளர்ச்சியையும் நன்மைகளையுங் கண்டு கீழ் நாட்டாராகிய நாம் பொறுமைப் படுவது சகஜமே யாயினும் சந்தோஷப்பட்டு அந்த ஐரோப்பிய தியாகிகளை வாழ்த்தி அவ்வழிகளை நாமும் பின்பற்றி நடக்கத் தொடங்கியுள்ளோம். இவ்வாறு ஐரோப்பிய நாகரீக தியாகத்தைப் பின்பற்றிச் செல்லும் இந்தியராகிய நாம் அத் தியாகங்களில் நன்மைகளைமட்டும் கைக்கொண்டு தீமையானவைகளைக் கைவிட வேண்டியது மிகவும் அவசியம். இந்த முன் ஜாக்கிரதையில் நாம் தவறுவோமானல் நாமும் நம் புண்ணிய பூமியும் அந்த ஐரோப்பியரைப்போலவே அழிவான படுகுழியில் வீழ்ந்து தவிப்போம் என்பதில் தடையில்லை. அத் தவறுகள் கீழே கண்ட சில வரிகளில் விளக்கப்படுகின்றன.

ஐரோப்பிய யுத்தம்.

சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் போர்புரிந்த சகல கக்ஷிக்காரரும் நல்வினையான தியாகத்தைச் செய்தார்களா? அன்றித் தீவினையான தியாகத்தைச் செய்தார்களா? என்று இங்கு ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஐரோப்பிய யுத்தமானது கேவலம் தங்கள் தங்கள் நாட்டைச் சத்துருக்களினின்றும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏற்பட்டதல்ல வென்பதைப் படிப்போர் மறக்கக்கூடாது. இங்கிலாந்து தேசத்தின் உலக சாம்ராஜ்யம் வளர்ந்து வருவதைக் கண்டு ஜர்மனியும், ஜர்மனியின் பெரும்புறக் கடலொத்த வர்த்தகக் கைத் தொழில் செழிப்பைக் கண்டு பிராஞ்சும் ஒன்றையொன்று பலஹீனப்படுத்தியழித்துவிட்டால் அந்நாடுகளின் வெளி நாடுகளையும் குடியேற்ற பாகங்களையும் தாம் கைக்கொண்டு, அவர்களை நல்லவர்களாக்கும்படி அவ்வெளிய தேசங்களை யெல்லாம் ஆண்டு குபேரர்களாகிக் கொடுங்கோலுக்கும் படு கீர்த்திக்கும் சான்றாக விளங்கலாமே யென்ற எண்ணங்களே யன்றி வேறன்று.

இங்கிலாந்து தேசம் மஹா யுத்தத்தில் அடியோடு தோற்றுப் போயிருந்தால் இதற்குள் இந்தியாவின் கல்விச் சாலைகளெல்லாம் ஜர்மன் கல்விச்சாலைகளாகி எங்கும் ஜர்மனி யின் கொடி பறந்து நாமும் அந்நியருக்கு மூன்றுமுறை அடிமைகளாயிருப்போமென்பதில் என்ன சந்தேக மிருக்கக் கூடும். லட்சக் கணக்கான சிப்பாய்களின் உயிர்களும் கோடிக் கணக்கான திரவியமும் பலிகொடுத்துப் போராடிய இந்த யுத்தமும் அழிவும் "உண்மையான தியாகம்" என்ற பதவியை யடைவதெப்படி? இந்த மூடச் செய்கையைத் தியாகம் என்று கூறுவதைவிடக் "கொள்ளைக் கூட்டத்தாரின் பெருங் கலகம்" என்று ஏன் நாம் கூறக்கூடாது.? தங்களுடைய நன்மையின் பெருக்கத்தைவிடத் தங்களுக்குச் சம்பந்த மில்லாத நிராயுதபாணிகளும், எதிர்க்கும் எண்ண மில்லாதவர்களுமான அந்நியர்களின் துன்பங்களை வளர்ப்பதிலும் அந்த அந்நியரின் கண்ணீரால் தங்கள் வஸ்திரங்கள் நனைவதில் ஆநந்தப்படுவதுமான எந்தக் கொடு வினையும் "உண்மையான தியாகம்" ஆகவே மாட்டாது.

பெல்ஜியம், சேர்வியா போன்ற சிறு நாடுகளை அடக்கியாளுவதில் தங்கள் தியாகத்தை சமர்ப்பித்த ஜர்மனியும் ஆஸ்டிரியாவும், இந்தியாவையும் எகிப்தையும். அயர்லாந்தையும் அடக்கியாளும் இங்கிலாந்து தேசத்தைவிடப் பாபகரமான தேசங்களாக மாட்டாதல்லவே, இரு கட்சி நாடுகளும் பாபநாடுகளென்பதில் தடை யென்ன?

ஆக இந்நாட்டாரியற்றிய மஹா யுத்தப் போராட்டத்தின் பலி தானங்களை எந்த வகையிலும் "தியாகம்" என்ற தலைப்பின் கீழ் கொள்ள வழியே யில்லை.

ஆனால் பெல்ஜியம், செர்வியா போன்ற சிறு நாடுகள் பேராசையின்றித் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தவித்த தியாகத்தை நாம் வாயாரப் புகழ்கின்றோம். அதுவே உண்மையான தியாகத்தில் சேர்க்கத் தகுந்தவைகளாகும்.

ஒரு பணக்காரன் அல்லது நிராயுதபாணியான செல்வவான் வீட்டிற்போய் கொள்ளை யடித்துக்கொண்டு வந்த செல்வத்தை வாங்கி வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாகத் தன் புத்திரர்களைப் போற்றிப் புகழ்ந்த தாய்போலவே இப்போது ஐரோப்பா இருக்கிறது. தியாகம் என்ற பதத்

திற்குச் சிறிதும் சென்ற மஹா யுத்தம் உதாரணமாக மாட்டாது.

ஆகையால் இத்தகைய கொடிய தியாகத்தைத் தற்கால இந்தியா புகழாமலும் புரியாமலு மிருக்க வேண்டும் என்ற பெருந் தயவினுலேயே இவ் ஐரோப்பிய யுத்தத்தின் அர்த்தத்தை எடுத்துக் காட்டினேம்.

இனி, தற்கால நம் நாட்டு விடுதலைக்காக நாம் புரிந்த தியாகங்களைப் பற்றியும் புரிய வரும் தியாகங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

நம் தேசீயத் " தியாகம் "

முன் கூறியதுபோல் ஐரோப்பிய " உத்தம தியாகங்கள் " அந் நாடுகளின் தேசாபிமானத்தால் வளர்ந்தது போல நம் நாட்டுப் புதிய தியாகங்களுக்கும் தேசாபிமானத்தாலேயே வளரத் தொடங்கி யிருப்பது ஆனந்திக்கத் தக்கதே யாகும்.

நம் நாட்டுத் தியாகத்தின் முதல் விதைகள் சுவர்க்க வாசிகளான ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் முதலியோரால் நாட்டப் பட்டு வளர்ந்து பிற்காலத்தில் பலபக்தர்களால் ஆதரிக்கப்பட்டுப் பெரு மரமாகி ஓங்கத் தொடங்கிவிட்டது. அந்தச் சரித விவரணம் இங்கு அவசிய மின்மையால் விடுத்து, அத்தியாக தருக்களாலாய சோலை நமது மஹாத்மா காந்தியின் ஆட்சிக் குட்பட்ட பின்னர் உண்மையான தியாகம் எவ்வாறு காண்டவ வனமாயிற் றெனபதைப் பார்ப்போம். உண்மையான தியாகத்தின் பொருள் மஹாத்மாவாலேயே நம்மவர்களுக்குத் தெரிவதாயிற்று. எப்பொழுதும் தியாகம் துன்பத்தைப் பெறும் தாயாக விருப்பதை தேச ஜனங்கள் நன்கறியச் செய்வதே தகுந்த வழியென்று மஹாத்மா தெரிந்து கொண்டார். ஆனல் துன்பத்தின் அனுபவ மறிந்த பின்னரே தியாகம் பலப்படுவதாக விருந்தமையாலும் தியாக மின்றித் துன்பம் அனுபவத்திற்கு வாராதாகையாலும் முதலில் தியாகத்தைச் செய்து துன்பத்தை உதிக்கச் செய்வதே சரியென நினைத்து " ரிஷிப்புரோக்தமான சத்தியாக்கிற ஒத்துழையாமை " என்ற உபதேசத்தைப் போதிக்கத் தொடங்கினர்.

லக்ஷ்மி

ருஷிய ஞானியான டால்ஸ்டாய் மஹரிஷியின் சுத்த விஞ்ஞான முறையை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டின் ராஜ தந்திர நிலைமைக்குத் தக்கபடி மாற்றி மஹாத்மா உபதேசித்து வந்த இந்த "மஹா வித்தை" யான தத்துவத்தை இருப்போரும் இனி வருவோரும் ஒவ்வொரு குடும்பத்திலும் கிராமத்திலும் தேசத்திலும் என்றும் விடாமல் அனுஷ்டித்துப் பலனடைந்து வரத் தகுதியுள்ளதாயிற்று.

எத்தனை சுயராஜ்ஜிய கட்சியார் கச்சைகட்டி நின்றழிப்பினும் எவ்வளவு தூரம் ஆங்கில ஆட்சியார் கட்டடங்களும் ஜயில்களும் கட்டித் தடுப்பினும் இந்த "மஹா தியாகம்" என்ற நெருப்பு அணைக்கும் நிலைமையை விட்டுத் தாண்டி வளர்ந்து விட்டது.

இந்த "மஹா தியாகமே" நம் நாட்டுக்கு மட்டுமன்று ஒவ்வொரு அடிமை நாட்டிற்கும் உலக முழுவதுக்கும் விடுதலையைக் கொடுக்கப் போகிற தென்பதை ஒவ்வொரு புத்திமானும் அறியக்கடவன்.

தியாகம் நன்மைக்கெனினும் தீமைக் கெனினும் கட்குடிக்குச் சமமான தாகும். தீமையில் அதற்குரிய பலனோடு அபகீர்த்தியும், நன்மையில் அதற்குரிய பலனோடு கீர்த்தியு முண்டாவது சுபாவமாகும்.

விரிந்த அறிவோடும் ஆழ்ந்த கருத்தோடும் கேவலம் அடிமைப்பட்ட நம் நாட்டிற்காக மட்டுமன்றி உலக முழுவதும் உஜ்ஜீவிக்கும் நோக்கத்துடன் மஹாத்மாவும் அவரது உண்மைச் சீடர்களும் செய்ததும் செய்யப்போவதுமான தியாகம் அன்னாரின் கருத்தை நிறை வேற்றுவதில் எந்த விஞ்ஞானியும் சந்தேகப்பட மாட்டான்.

ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானிய கடற்படைத் தலைவர் அட்மிரல் "டோகோ" போர்ட் ஆர்தர் துறைமுகத்தை அடைந்து விடுவதற்குச் சில ஆயிர மனிதர்கள் நிறைந்த சில கப்பல்களை முழுகவைத்தல் மிகவும் அவசியமென்று கூறியபோது எத்தனை லட்சம் ஜனங்கள் தங்கள் உயிர்களைக் கொடுக்கத் தயாராய் இருப்பதாகத் தங்களுடைய ரத்தத்தால் எழுதப்பட்ட கடிதங்களை யனுப்பியிருந்தனர் என்ற சரித்திர உண்மையை நாம் படித்திருக்கிறோ மல்லவா?

தியாகத்தின் பெருமை

இந்த அற்புத தியாகத்தைக் கேட்கும்போது நமது உடல் மயிர்க் குச்செரிய வில்லையா? மனம் ஒரே காலத்தில் நடுக்கமும் ஆனந்தமு மடைய வில்லையா? இவ்வித செய்கையை யன்றோ அறிவுடையார் தீரமான தியாக மென் றழைக்கின்றனர்.

நம் நாட்டு விடுதலைக்காகச் சென்ற மூன்று வருடங்களில் மஹாத்மாவின் படைகள் செய்த அதி யற்புத தியாகங்களைப் புகழும் திறமை நமக்கிருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

சற்றேறக்குறையத் தேச முழுவதிலும் உள்ள ஆண், பெண், சிறுவர்கள், விருத்தர்கள் வரை அச்சமயங்களின் எத்துன்பத்தையும் சகிக்கத் தயாரா யிருக்கவில்லையா? தங்கள் வாழ்நாட்களைத் தேசத்திற்காகத் தத்தம் செய்துவிட்ட இளைஞர்களையும் பெரும் படிப்பாளிகளையும் நாம் எண்ணி முடியுமா?

கல்வி யிழந்தும், வேலை யிழந்தும், ஆஸ்தி முழுவதையு மிழந்தும் ஒரு தரம்போல் பல தரம் ஜயில் வாசம் செய்தும் சர்வ பரித்தியாகிகளாகித் தவிப்பவர்களை நாம் இன்றும் பார்க்கவில்லையா? தேச மாதாவின் விடுதலையே பெரிதாகத் தங்கள் உயிர்களை ஜயிலிலும் வெளியிலும் தத்தம் செய்தவர்களின் தியாகத்திற்கு விலைகொடுக்க நம்மால் முடிவதாகுமோ? கீர்த்தி பெற்ற ஹிந்தி பிரசாரஞான பரமாத்மா காலஞ் சென்ற வாஜபேயின் சரித்திரம் நாம் மறக்கற் பால தாகுமா? நாகப்பூர்க் கொடிப்போரில் நமது வாலிபர்களும் கற்றோரும் மற்றோரும் துணிந்து கூட்டங் கூட்டமாகக் குழுமிச்சென்று ஜயில் வாசத்தைச் சுவர்க்க வாசமாக மனமகிழ்ந் தேற்று அனுபவித்து ஆநந்தத்துடனும், வெற்றியுடனும், வீரத்துடனும் மீண்ட கீர்த்தியை நாம் மறக்க முடியுமா? இந்தப் பெரும்போரில் நம்மவர்கள் அடைந்த கீர்த்தியே எதிர் காலத்துப் பாரத சுதந்தரத்திற்கு எழுப்பப்படுகிற சுதந்தரக் கோட்டைக்கு அஸ்திவாரமாக அமைவுற்றதை யாவரால் மறக்கமுடியும்.?

இவ்வரிய வெற்றியைப் பற்றி ஒரு தமிழ்க் கவிஞன் அடியிற் கண்டவாறு பொய்யற்றுக் கூறி மனதாரப் புகழ்ந்திருக்கும் அழகைப் பாருங்கள்.

லக்ஷ்மி

நாகபுரி கொடிப்போர்.

(அறுசீர்)

கொடிப் போரென் றுலகறியக் கூவியறை
கொண்டதற்பின் குவிதோள்தட்டி
நொடிப்போதில் தமிழ்வீரர் அணியணியாய்த்
தாய்நாட்டின் நோன்மை காப்பான்
படிப்போரும் படித்தோரும் படிப்புணர்த்தும்
பாவலரும் படைஞராகித்
துடிப்போடுஞ் சிறைபுகுந்து வெற்றியுடன்
மீண்டபுகழ் சொல்லற்பாற்றோ ?

வங்காளர் கூச்சரர்கள் மாராடர்
பாஞ்சாலர் வடுகர் மச்சர்
கங்காளர் மனமுவந்த காசிவள நாடர்முதல்
கலந்த போரில்
கொங்காரும் தமிழ்வீரர் கொடிப்போரில்
பகைதடித்துக் கொண்டவெற்றிக்
கெங்கோநா மிணையுரைப்பா மினித்தொலையோ
சுதந்தரத்தின் எல்லையம்மா.

குடிகாத்துக் கோல்காத்துக் குலங்காத்து
மதங்காத்துக் குறைவில்செல்வப்
படிகாத்துப் பாரதர்தம் பகைகாத்த
திறமின்று பலருங் காண
அடிகாத்த கொடுங்கோன்மை அன்னியர்தம்
குறும்பழித்திங் கன்னைவாழ்த்தக்
கொடிகாத்த நந்தமிழர் பெருமையினை
யாமெடுத்துக் கூறற்பாற்றோ ?

நம்பகைவர் மனங்கலங்க நாடெலாமுணர்
வெழும்ப வை தீர் சீர்த்தி
"கும்பமுனி யனைய தவன்" சிறையிருந்து
சிரங்குலுக்கிக் குளிரஉள்ளம்
தம்பியராம் "தமிழிளைஞர்" கொடிப்போரில்
தலைகொடுத்த தன்மைநோக்கில்
இம்பரினிச் சுதந்திரந்தான் எளிதெளிதென்
றெவ்வுலகு மியம்பு மன்றே.

தியாகத்தின் பெருமை

சிமிழ்மணக்கும் முலைமாதர் திறம்வியப்பப்
பகைவர் மனம் திரிந்துவாட
அமிழ்தளிக்கும் பாரதத்தாய் வெற்றிதன
தாகவென ஆசிகூறத்
தமிழ்மணக்கும் நந்நாட்டின் தாய்ப்பாலை
உண்டமொழிச் சபதங்கூறி
உமிழ்கிரணக் கொடிகாத்த பெருங்கீர்த்தி
உலகில்நிலைத் தோங்கிற்றன்றோ.

இவ்வித பல அரிய தியாகங்களை இனி எழுதப் போகும் இந்திய சரித்திரத்தை அலங்கரிக்கும் அணிகளாகச் செய்துள்ள நம் பாரத மக்கள் இனியும் அரும் பெருந் தியாகங்களைத் தேசத்திற்காகவும் இழந்த வீரதீர சுதந்திரங்களுக்காகவும் அழிந்துபோன கலைகளுக்காகவும் செய்துவர ஆயத்தமாவார்கள் என்றும் அல்லது ஆயத்தமாகவே யிருக்கிறார்கள் என்றும் கூறுவதில் தடை யிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

நல் விரத்தமின்றி ஜீவன் குறைந்து பெரு மரணத் தூக்கத்திலிருந்து எழுந்து கண் தெரியாமையால் தடவிக் கொண்டிருந்த நமது காங்கிரஸ் மகா சபையையும் நாட்டாரையும் எழுப்பி அவர்கள் நரம்புகளில் "சத்தியாக்கிர"கமென்னும் ஜீவ சக்தியைக் கொடுத்து எழுப்பிப் படை வகுத்துப் பழக்கி நடத்தித் தியாகம், தியாகம், தியாகம் என்ற பேரிகையை முழக்கித் தேச மக்களைத் தியாகிகளாகச் செய்து தாமும் தியாகத்தின் ரகசியங்களைப் புரிந்து காட்டி உலகத்தைக் காக்கவந்த மஹாத்மா மோஹனதாச கர்ம சந்த்ர காந்தி நீடூழி வாழ்க வென இயற்கைத் தெய்வத்தை நாம் தொழுமோமாக.

தியாகமும் ஓங்கி வளர்ந்து இவ்வுலக முழுவதற்கும் ஒரு உதாரணமாகி எந் நாட்டிலும் மதத்தை வீழ்த்தி அறத்தை வளர்த்துக் காத்துப் பெருகுவதாக.

வந்தே மாதரம்

வெண்பா.

நாடுஞ் சுதந்தரமும் நற்கலையும் பொற்குவையும்
பீடும் பெருந்திறனும் பேரறமும்—வீடும்
உரித்தாகு மெல்லா வுலகும் புகழப்
பரித்தியாகம் ஒன்றால் நீ பார்.

உணவாலடையும் உயிர் வலிமை

ஸ்ரீமான். பா. ஆதிமூர்த்தி எழுதியது.

ஒரே காலத்தில் ஒரே வினையைக் கொண்டு பல்லாயிரம் வினைகளை ஒரே வழியையும், பயனையும் கொடுக்கும்படி செய்யும் இயற்கையின் அதி யாச்சரிய கரமான வல்லமையை யாரால் புகழ முடியும்? இந்த இயற்கையின் மகா வல்லமையை நாம் எங்கும் தினசரி பார்த்து வருகிறோம். மானிட சரீரத்தில் செய்யும் இயற்கையின் அற்புத வினைகளை இங்கு நாம் உதாரணமாக எடுத்துக் கொண்டு உணவுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தத்தைச் சிறிது இந்த அத்தியாயத்தில் ஆராய்வோமாக.

நமது ஜீவசக்தி அப்பியாசிகளான யோகிகளின் சித்தாந்தப்படி உணவின் துணை, உயிருக்கு எவ்வகையில் எங்ஙனம், எவ்வளவு தூரம் பயன்படுகின்றது என்பதைப் படிப்போர் அறிய ஆவல் கொண்டிருப்பார்கள் என்று நாம் நினைக்கிறோம்.

மனிதர்களுக்குப் பொதுவாக உயிர் வாழ்வதற்கு வேண்டிய ஆகாரங்களான வாயு, ஜலம், அன்னம் அல்லது கட்டியுணவு ஆகிய இம் மூன்றும் வாயு பதார்த்தம், ஜலபதார்த்தம் கட்டிப் பதார்த்தம் ஆகிய பொதுப் பதார்த்தங்களின் மூன்று நிலைமைகளைப் பிரதி பிம்பிக்குமாறு இயற்கையின் வல்லமையால் உடலும் உயிரும் தனக்கு அத்தியாவசியமாக எடுத்துக்கொள்கின்றன.

இம் மூன்று பதார்த்தங்களில் ஒன்றாகிய கட்டியுணவு அல்லது அன்னத்தால் உயிரடையும் உதவி சிறிதே யெனினும் அவசியம் மிகவும் முக்கியமானதாகும். ஆகாரத்திலிருந்து இரண்டரை முதல் ஆறு பாகைகள் வரை ஜீவனை, தேகம் அடைகிறது என்று விஞ்ஞான சாஸ்திரிகள் மதிக்கிறார்கள். இந்த பாகம் மனித ஜீவன் பலத்தையும், சுருசுருப்பையும் அடைய மிகவும் அவசியமாகும்.

ஆகாரத்திலுள்ள சக்தியைப் பற்கள் அவ் வாகாரத்தைக் கடித்துப் பிரிவினையுள்ள துண்டுகளாக்கிப் பின் அணுக்களாக்கி அவ்வணுக்குள்ளிருக்கும் ஜீவ சக்தியை நாக்கு வாய் இவைகளிலுள்ள நரம்புகளுக்கு உணவாகக் கொடுக்கின்றன.

பல்லினால் கடிக்கப்பட்டுப் பிரிக்கப்பட்ட ஆகார அணுக்களின் ஜீவ சக்தியானது முறைப்படி தேகத்திலுள்ள பல ரசாயன பதார்த்தங்களோடு சேர்ந்து அளவான ரசாயன மாற்றமடைந்து முறைப்படி இரத்தமாக மாறுகின்றது. இவ் வுண்மையைத் தற்கால விஞ்ஞான தேக தத்துவ சாஸ்திரிகள் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்கிறார்கள்.

உணவா லடையும் உயிர் வலிமை.

தேகத்தின் எந்தப் பாகத்திற்கு ஜீவ சக்தி வேண்டுமோ, அந்தப் பாகத்திற்கு இரத்த வோட்டத்தால் ஆகார ஜீவசக்தி கொண்டு போகப்பட்டும் அழுக்குகளை ஒதுக்கப்படவும் செய்கிறது, எப்பொழுதும் இந்த வேலைகள் இரவும் பகலும் தேகத்தில் நடந்து கொண்டே யிருப்பதால் அவசியமான வேலைகள் நடந்துகொண்டே யிருக்கின்றன. தேகத்தின் ஜீவன் தன் செலவுக்குப் புதிய வரவைப் பெற்றுக்கொண்டே யிருப்பதை நாம் அறிகிறோம்.

நாம் சுவாசிக்கும் வாயுவில் எண்பது முதல் தொண்ணூறு வரை ஜீவ சக்தி நிறைந்திருப்பதால் தேகத்திற்கு அந்த வாயுவின் ஜீவ சக்தியே போதுமானதாக விருக்க ஏன் ஆகாரத்திலிருந்தும் சக்தியைப் பிரித்துத் தேகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று நினைக்கலாம். ஆனால் ரசாயன தத்துவப்படியும் சிருஷ்டி தத்துவப்படியும் பல கலப்புப் பதார்த்தங்கள் சேர்ந்தே ஒரு கூட்டுப் பதார்த்த மாவதால் அவசியமான கட்டிட வேலை அல்லது சிருஷ்டி வேலை அந்த ரசாயனக் கலப்பு வேலைகளால் நடக்கிறது. அங்ஙனம் ரசாயனக் கலப்புள்ள அவசியமான பதார்த்தங்களில் ஏதேனும் ஒன்று அணுவளவு குறையினும் மிகினும் சேர்க்கைப் பொருளின் ஜீவ சக்தி குறைந்தும் குலைந்தும் போவது நிஜமாகும்.

ஆகவே சுவாஸ வழியாக உட்கொள்ளும் வாயுவில் உள்ள ஜீவ சக்தியும் கட்டி யாகார பதார்த்தங்களிலுள்ள ரசாயன பௌதிக சார ஜீவ சக்தியும் அளவாகக் கலந்து தேக ஜீவபோஷணைக்கு வேண்டிய சக்திகளைப் பெறுகின்றன. இந்த நிலையில் அணுப் பிரமாணமேனும் குறையுமானால் அல்லது இவ்வேலைகளில் சிறிதேனும் குறையுமானால் உத்தேசிக்கப்பட்ட வேலைகள் தடைப்பட்டு விடும். ஆகவே வாயுவைப் போலவே ஆகாரம் அத்தியாவசியமான தென்றறியற் பாலது.

இது போலவே ஒவ்வொரு உணவுப் பொருளும் தன்னிடம் அடக்கி வைத்திருக்கும் அவசியமான ஜீவ சக்தியை தேக ஜீவ வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும்போது அததன் சுபாவ குணங்களைத் தேகத்தில் காட்டித் தன் கடமையைச் செய்வதை நாம் பார்க்கலாம். இப் பதார்த்தங்கள் தன் அளவில் அதிகப்படுமானால் அல்லது குறையுமானால் அதனால் ஏற்படும் தீமைகளையே நாம் வியாதியென் றழைக்கிறோம். அவ் வியாதிகளை நிவர்த்திக்க வேண்டியே இந்த ரசாயனங்களுக் கெல்லாம் பொதுவும் தலைமையும் பெற்றுப் பரிசுத்த சுபாவத்தையும் அபார சக்தியையும் பெற்றிருக்கிற பிராண வாயுவானது சாதாரண வாயுவுடன் கலந்திருக்கிறது. அதைப் பிரயோகப்படுத்துவதால் இந்த ரசாயன மிகுதிகள் எச்சரிக்கப்பட்டு நிதானத்தை யடைகின்றன.

பிராண வாயுவினல் மனித னடையும் சக்திக்கும் உணவு முதலிய பல பதார்த்தங்களால் மனித னடையும் சக்திக்கும் அளவினு என்றி மற்றெந்த வகையிலும் யாதொரு வித்தியாசமும் இல்லை. உதாரணமாக மின்சாரம், சூரியவொளி, சீதம், அல்லது உஷ்ணம் ஆகிய சக்திகள் எந்த இடத்திலிருந்தாலும் எத்தகைய உருவத்துட னிருந்தாலும் அளவினுலன்றி மற்றெவ் வகையாலும் பேதப்படாதது போல், வாயுவிலிருந்து அடையும் பிராணனைப் போலவே மற்றப் பதார்த்தங்களால் அடையும் யாதொரு வித்தியாசத்தையும் உடையதல்ல பிராணனைப் போலவே. மேலே அளவினுல் மட்டும் வித்தியாசப்படுகின்றனவென்று கூறியபடி அச் சக்திகளின் பிரயோக அளவின் வினைக்குத் தக்க பலனை மட்டும் தருகின்றன. ஒவ்வொரு சக்தியும் அதனதன் வேலைகளைச் செய்வதற்காக அவசியம் வேண்டியதே யாகும். இந்நிலையில் இயற்கையின் அற்புத சக்தி தலைமை வகித்ததாகி எந்த எந்த சக்தியிலிருந்து எவ்வள வெவ்வளவு வேண்டுமோ அந்த அளவுப்படி எடுத்துக் கொண்டு மிகுதியாகும் பொழுதோ குறையும் பொழுதோ வலியாலும் நோயாலும் வேட்கையாலும் தெரியப்படுத்துகின்றன. விவேகத்தால் மனிதன் அதை அறிந்து மிகுதியைக் குறைக்கவும் வேட்கையை நிரப்பவும் எவ்விதம் செய்யவேண்டுமோ அவ்விதம் செய்துகொள்ள வேண்டும்.

ஆகாரத்தை மென்று தின்பதில் பல வித அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டபோதிலும் யோக முறைப்படி ஆகாரம் தொண்டைக்குள் விழுங்கத் தகுதியடையும் வரையிலேயே மெல்லப்படல் வேண்டும். தொண்டையில் செல்லத் தகுதியான அளவில் சிறு துண்டுகளானவுடன் தாட்சண்ணிய மற்று ஆகாரத்தை விழுங்கி விடலாம். தேகத்தின் உட்பாகத்தில் இரத்த அனலாலும் ஜீரண இயந்திரக் கருவிகளாலும் மற்ற வேலைகள் சரியாக நடத்தப்படுகின்றது. சிறு குழந்தைகள் சந்தோஷத்துடன் சுவைப்பதும் முழு மனிதர்கள் விருப்பத்துடன் நக்குவதும் உருசியைக் கிரகிக்கும்பொருட்டே யென்க. சில ஆகாரங்கள் அதிகம் மெல்லவேண்டியதாலும், வேறு சில சிறிதே மெல்லவேண்டியதாலும், மற்றும் பெரும்பாலும் மெல்லவேண்டியதே அவசிய மற்றதாகவுமிருப்பதால், ஆகாரத்தின் ஜீவ சக்தி ஜீரணத்திற்குப் பூர்த்தியாகத் தகுதியாகும்படி அவ்வவ் பதார்த்தங்களுக்குத் தக்கபடி மெல்வதை அவரவர்களே நிதானித்தறியத் தகுந்தது.

நன்ருக உணவின் சக்தி ஜீரணமாகி, ஜீரணத்தின் பலத்தால் ஜீவ சக்தியாக மாறுமாயின் பிராண வாயுவின் சகாயத்தால் இரத்தமாக மாறி தினந்தோறும் சரீர வளர்ச்சித் தருவதால் நாம் அறியலாம். அவ்வாறின்றி ஆகாரத்தின் சக்தி எந்த வழியிலே

னும் வீணுகுமானல் தேக பலத்திற்கு ஆகாரத்தால் உதவியின்றி யொழிகிறது.

இந்த விஷயத்தில், நமது விவேகத்திற்கும் சீக்கிரம் எட்டாத ஒரு கஷ்ட விவகாரத்தில் நாம் பிரவேசிக்கவேண்டியதாக விருக்கிறது. அது எது வெனில்:—ஜீரண சக்தி குறைந்த நிலைக்கு வந்தவர்கள் தங்களால் ஜீரணமாகக் கூடிய பதார்த்தங்களையே யுண்டு தங்கள் வாழ் நாட்களைப் போக்குவது உத்தமமா? அன்றிக் கடின ஆகாரங்களை உண்டு பழகி அக்கடின பதார்த்தங்களையே ஜீரணமாகும்படி செய்து அபிவிருத்தி முகத்தை நாடிச் செல்வது உத்தமமா? என்பதே யாகும்.

இக் கடின கேள்விகளிலுள்ள கஷ்டங்கள் முக்கியமாக இரண்டாகும். முதலாவது ஜீரண சக்தி குறைந்திருக்கும்போது அற்ப ஆகாரங்களையே புசித்து அவ்வற்ப ஜீரணத்துக்குட்பட்டு நடந்து வந்தால் வரவர ஜீரண சக்தி இனியும் குறைந்து நோய் பெருகிக்கொண்டே வருவதை நாம் பார்க்கிறோம். இது மரணத்திற்கு வெகு சீக்கிரம் கொண்டுபோகிறது. மற்றொன்று:—சிறிது சிறிதாகக் கடின ஆகாரங்களை யுண்டு பழகி அக்கடின பதார்த்தங்களையும் ஜீரண மாக்கப் பார்த்தால் இவ்வழியில் தேகோ பாதைகள் ஏராளமாக விருக்கின்றன. இவ்வுபாதைகளை விவேகமாகப் பார்க்காவிட்டால் நோவும் கஷ்டமும் அதிகமாகி மரணம் சம்பவிக்கின்றன. ஆக இரு வழிகளிலும் கஷ்டங்களிருப்பதால் இவ் வழியும் ஆபத்துள்ளதாகவே தெரிகிறது.

படிப்போர் மேலே கண்ட இருதலைக் கொள்ளி நிலையைக் கண்டு கலங்குவார்க ளென்றே நம்புகிறோம்.

ஆனல் ஜீவசக்தி அப்பியாசத்தை நாம் துணையாகக் கொண்டோ மானல் இத் துன்பங்களைச் சீக்கிரம் ஜெயித்து விடலாம். எவ்விதமான இந்திய ஐரோப்பிய யூனனி வைத்திய முறைகளால் நிவர்த்திக்க முடியாததுமான கஷ்டங்களை நிவர்த்திக்க நமது ஜீவ சக்தி தயாராக எப்பொழுதும் காத்திருக்கிறது.

தேகநிலை மிகச் சுகமுள்ளதாக இருந்தாலன்றி ஆகாரத்தால் அடைய வேண்டிய ஜீவசக்தியின் பாகம் முழுவதையும் மனிதர்கள் அடைய முடியாது. ஜீரணத்தின் சம்பூர்ண வேலையால் ஆகாரம் ஜீரணத்தை யடைய வேண்டும். ஜீரணம் தேகபலத்தால் பலமுடையதா யிருத்தல் வேண்டும். ஆகவே சுகதேகியே ஆகார ஜீவ சக்தியைப் பூர்த்தியாக அறிகிறான்.

ஜீவன் தேகத்தில் குறைவது போலவே ஜீரணமும் குறைவதால் ஜீவன் குறை வடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நமது கடமையாகும். இதற்கு ஜீவன் மிகவும் அவசியமானதென்று ஒவ்வொருவரும் அறிய வேண்டியது.

அன்றியும் உணவின் மீதுள்ள ஆவலாலும் இயற்கையான ஆகார ருசியை நாம் நன்கறிவதினாலும் உண்மைப் பசியை அறிந்து கொள்கிறோம். அச் சமயமே போஜன மருந்துவதற்குத் தகுந்த காலமென் றறிந்து கொள்ளவேண்டும். கள்ளப் பசி யெழுப்புங் காலங்களிலும் பித்த மயக்கத்தால் தோன்றும் பொய்ப்பசிக் காலத்திலும் நாம் கண்டிப்பாக ஆகாரம் உட்கொள்ளக் கூடாது. அவ்விதம் உட்கொள்வதால் ஆகாரம் பூரணமாக ஜீரணமாகாமல் ஆகாரத்தால் நாம் அடைய வேண்டிய ஜீவ சக்தியை அடைய முடியாமற் போய்விடுகிறது.

ஆகாரத்தை நன்கு மென்று தின்பதும் சிறிது மென்பதும் மெல்லாமலே உட்கொள்வதுமாகிய விதங்களில் நமது ஜீவசக்தி அப்பியாசத்தை அனுஷ்டிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை யொன்றுமே யில்லை. ஏனெனில் ஜீவ சக்தியானது அவசியமான வேலைகளைத் தானே செய்துகொள்ளுகிறது. அப்பியாசியின் தேக தத்துவங்கள் சாதாரண மனிதர்களின் நிலையை விட மிகவும் சுருசுருப்புள்ளதாகவும் இருப்பதால், ஜீரணக் கருவிகளிலும், இரத்த வோட்டத்திலும் செய்ய, வேலைகளைத் தாமே செய்து கொள்கிறது.

சிறு குழந்தைகள் பதார்த்தங்களை மென்றுண்ணும் பருவத்தை யடையத் தொடங்கியதும் பெரும்பாலான ஆகார பதார்த்தங்களை நன்கு மெல்லாமலே விழுங்கி விடுகின்றன. இப்படி விழுங்குவதால் தாய்மார்கள் பயப்படவேண்டிய நியாய மில்லை. குழந்தைகளின் இயற்கையான சக்தி வளரும் சுபாவத்திலிருப்பதால் தன் பழக்கத்திற்கு வரவேண்டிய அவசியமான வேலைகளைத் தனக்குத் தானே செய்துகொண்டு வருவதில் ஜீவ சக்தியே பிரயாசை எடுத்துக் கொள்வதாகும். ஆகவே குழந்தைகள் மெல்லாததால் கெடுதி யொன்று மில்லை.

சாதாரணமாகவே மனிதர்கள் பதார்த்தங்களை நன்றாகப் பற்களால் மென்று தான் உட்கொள்ள வேண்டுமென்றும், அங்ஙனமின்றேல் ஆகாரம் ஜீரணத்திற்கு வருவதில்லை யென்றும் நினைக்கிறார்கள். இது தப் பபிப்பிராயமாகும். மிகவும் மெதுவான ஆகாரங்கள் மாவாலான பண்டங்கள் முதலியன ஜீரணத்திற்கு வராமல் கஷ்டத்தையும் கோழையையும் உண்டாக்கும்போது தவிடு கலந்ததும் முழுப் பால்களை யுடையதும் அதிகம் பல்லினால் துண்டு படுத்தப்படாததுமான ஆகாரங்கள் மிகவும் சிரமமின்றி ஜீரண மடைவதைப் பார்க்கிறோம். பெரும்பாலும் மலபந்தம் போன்ற அசங்கியமான நோய்கள் அதிகமாக மென்று தின்பதினாலேயே யுண்டாகின்றன வென்று சிறந்த வைத்தியர்கள் அபிப்

பிராயப்படுகிறார்கள். ஆகையால் வளர்ந்த மனிதர்களும் நன்றாக மென்றுதான் விழுங்கவேண்டும் என்பது அவசியமில்லை.

ஆனால் ஆகாரம் உண்ணக் கூடியவர்கள் இங்கு கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது எதுவெனில்:—ஒவ்வொரு ஆகாரமும் ஜல பதார்த்தமாக விருப்பினும் கட்டிப் பதார்த்தமாக விருப்பினும் "உமிழ்நீருடன்" கலந்த பிறகே உட்செல்ல வேண்டும் என்பதே. உணவில் உமிழ்நீரின் அவசியம் இன்றி யமையாதென்பதை யாவரும் அறிந்திருக்கிறார்க ளாகையால் அந்த அவசியத்தை இங்கு நாம் விவரிக்கவில்லை. உமிழ்நீரின் கலப்பற்ற ஆகாரம் ஜீரணமாகத் தகுதியற்ற தென்பதையும் பயனற்றதாகு மென்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

பால், தயிர், மோர், ரசம், அன்னம், பாயசம், கஞ்சி முதலிய ஜல ரூபமான பதார்த்தங்களை வாயில் நிறுத்தாது உடனே விழுங்கி விடுவதால் அப் பதார்த்தங்கள் ஜீரணமாவது மிகவும் கஷ்டமாகின்றன. அப்பதார்த்தங்களை வாயில் சில நிமிஷங்கள் வைத்திருந்து உமிழ்நீருடன் கலக்கும்படி செய்து விழுங்கிவிட்டால் வெகு சீக்கிரம் ஜீரணமாகி விடுவதைப் பார்க்கலாம். அன்றியும் குடி பானங்கள் நாக்கினால் சிறிது அலசப்பட்டவுடனேயே உமிழ்நீரைத் தாமதமின்றிப் பெற்று விடுகின்றன. பதார்த்தத்தின் உருசியும் மணமும் நன்கறியப்பட்டுப் பதார்த்தம் அருந்துவதா லுண்டாகும் பலனையும் ஆனந்தத்தையும் நேராக அடைகிறோம்.

நமது ஜீவ சக்தி யப்பியாசத்தைக் கைக்கொண்டவர்கள் ஆகாரத்தை உட் கொள்வதில் மற்றவர்களைவிட ஒரு விசேஷ ஆனந்தத்தை யடைகிறார்கள். எப்படியெனில் போஜன பதார்த்தங்களின் உருசிகளைச் சிறு குழந்தைகளைப் போல் நன்கு அறிகிறார்கள். ஆகவே ஆகாரத்தின் சக்தியைப் பூர்த்தியாக அவர்க ளனுபவிக்கிறார்கள்.

ஆகவே ஜீவ சக்தி யப்பியாசிகள் ஆகாரத்தால் அடைய வேண்டிய பிராண சக்தியின் பாகத்தை முழுவதும் அடைந்தவர்களாய் அபிவிருத்தி வழியில் செல்கின்றனர்.

உணவு.

ஒரு குழந்தையின் வளர்ச்சி குழவிப் பருவத்திலிருந்து மனிதப்பருவம் வரை எந்த ஆதரவைக்கொண்டு உண்டாகிற தென்றும் ஓரளவு வரையில் வளர்ந்து, அவ் வளர்ச்சி என்ன காரணத்தால் நிற்கிற தென்றும் இதுவரையில் இந்த அற்புத ரகசியம் ஒருவராலும் விளக்கப்படவில்லை.

இவ் விஷயத்தைக் குறித்துப் பல வருடங்கள் ஆராய்ந்து முடிவு கண்டு பிடிக்கப் பிரயாசைப்பட்ட பல புத்திமான்கள் மனித

வளர்ச்சியில் உணவு அல்லது ஆகாரம் புரியும் அற்புதமான வேலையை அடியிற்கண்டபடி விவரித்திருக்கிறார்கள்.

வளர்ச்சியில் முக்கியமான இரண்டு பாகங்க ளிருக்கின்றன. ஒன்று உள்நிலை வேலைகள், ஆகாரத்தைச் சீரணித்தல், கழிவை வெளிப்படுத்தல், இரத்த வோட்டத்தைக் கிரமப் படுத்தல், உயிரினலைப் பரிசுத்த எரிப்பில் நிறுத்திக் கொள்ளுதல் முதலியன. மற்றொன்று வெளிநிலை வேலைகள் :—சருமம், ரோமம் இவைகளை நன்னிலைப் படுத்தல், வாயு, ஜலம், உஷ்ணம், குளிர்ச்சி இவைகளுக்கு வெளியி னின்றும் ஈடுகொடுத்தல், ஆகாராதிகளையும் பானங்களையும் பார்த்துப் பரிகறித்து ஏற்றுக் கொள்ளுதல் முதலியன வாகும்.

இவைகள் எவ்வித மிருப்பினும் வளர்ச்சிக்கு ஜீரணமும், ஆகார சத்தும்தான், உதவி செய்தல் வேண்டும். ஒவ்வொரு மனித ஜீவனும் அழிவிற்கும் செலவிற்கும் ஈடு செய்வதற்காக கொஞ்சம் ஆகாரத்தை அவசியம் விரும்புகிறது. இது இன்றி யமையாமையாகும். முழுவதும் வளர்ந்த மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் உணவு, உப்பு இவைகளைவிட வளர்ச்சியிலிருக்கும் சிறுவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அதிகமாக உணவும் உப்பும் கேட்பதோடு அங்ஙனமே எடுத்துக்கொள்கிறார்கள். ஏனெனில் வளர்ந்து முடிந்த முழு மனிதன் தனது செதிள்கள் வளர்ச்சியில் பூர்த்தியடைந்து விட்டதால் கழிவுகளை மட்டும் காப்பாற்ற ஆகார முண்கிறான். வளரும் சிறுவனே தனது தேகத்தின் புதிய சிருஷ்டியின் தொழில் பூர்த்தியடைவதற்காக ஆகாரசக்தி அதிகம் செலவாவதால் அடிக்கடி ஆகாரத்தை விரும்புகிறான். ஆனால், ஆகார பதார்த்தங்களை ஏராளமாகத் தேகத்தில் சேர்ப்பதால் மட்டும் தேகம் வளர்வது அதிகப்பட்டுவிட மாட்டாது. அவ்வாகாரத்தில் வளர்ச்சிக்குத் துணைபுரியும், மாவு, சர்க்கரை, உப்பு, இவைகள் போதுமான அளவு இருத்தல் வேண்டும். இல்லையேல், வளர்ச்சி வளர்வதற்குப் பதிலாக நிறுத்தப்பட்டு விடலாம். கடைசியாக எவ்வளவு வளர்ச்சிக்கு அனுகூலமான உணவினங்கள் அதிகமாகவும் சர்க்கரையாகவும் கொடுக்கப்பட்ட போதிலும் இயற்கையால் அளக்கப்பட்டுள்ள எல்லைக்கு மேல் வளர்ச்சியுண்டாக மாட்டாது.

வளர்ச்சியைப்பற்றிய ஒரு புது சித்தாந்தம் சமீப காலத்தில் கிளம்பி யிருக்கிறது. எப்படி யெனில்:—வளர்ச்சி, உணவின் சக்தியைப் பொறுத்ததென்பது நிஜமாகையால் உணவு இயற்கையைப் பொறுத்திருப்பது அவசியம். இயற்கை யுணவாகிய சமையல் இல்லாத பதார்த்தங்களை மனிதர்கள் உணவாகக் கொள்வதானல் மனித தேகத்தின் வளர்ச்சிமட்டு மன்று, மனிதர்களு

டைய புத்தி வளர்ச்சியும் ஆயுள் வளர்ச்சியு முண்டாகும் என்று கூறுகிறார்கள்.

எமது சம்மதமும் இதுவே யாகும். எப்பொழுது மனித வாழ்க்கை இயற்கையையே முழுவதும் நம்பினதாக வருகிறதோ அப்பொழுதே, மனவாழ்வு ஆனந்தமுள்ளதா யிருக்கச் சாத்திய மானதாகும்.

உணவுப் பொருள்கள் தேகத்திற்கும், பிராணனுக்கும் எவ்வளவு அவசியமாக இருந்தாலும் அவ்வுணவுப் பொருள்களை ஜீரணம் செய்யும் சக்தி தேகத்திலிருந்தா லொழிய அவ்வுணவுப் பொருள்களால் யாதொரு பயனும் உண்டாவதில்லை. அச்சக்தி எப்பொழுதேனும் குறைந்து விடுமானால் அதை மறுபடியும் நிரப்பிக்கொள்ளும் வழி மனிதர்களுக்குத் தெரியாததே மிகவும் துக்ககர மானதாகும்.

மனித ஜாதியும் இவ்வுலகத்தின் மிருக இனத்தையே சேர்ந்த தாகையால் மனித ஜாதிக்குரிய உணவு சமையல் செய்யப்படாத உணவே யன்றிச் சமையல் செய்த உணவல்ல. இயற்கையில் சக்தியை மனிதன் அடையவேண்டின் இயற்கையான ஆகாரங்களையே மனிதன் உட்கொள்ளல் அவசியம்.

நெருப்பில் சுடப்பட்ட அல்லது வேக வைக்கப்பட்ட ஆகாரங்களை உண்டு பழகத் தொடங்கிய காலம் முதலே மனித சமூகம் பலஹீனத்தையும், அற்ப ஆயுளையும் அடையத் தொடங்கிய காலமாகும். நோயற்ற வாழ்வு சமைய லற்ற ஆகாரத்திலேயே யிருக்கிற தென்ற உண்மையை மனிதர்கள் மறுபடியும் அறியுங் காலம் வரவேண்டும் என்பதே நமது வேண்டுகோளாகும்.

சமையலற்ற ஆகாரத்தை யுண்டு பழக விரும்பும் நமது சகோதரர்கள் மெதுவாகவும் விடாமலும் பழகிப்பழகி முழுதும் சாதனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதை மறக்கக்கூடாது. சமையலற்ற ஆகாரங்களை யுண்டு பழகுகிறவர்கள் முதலில் கெட்டி ஆகாரங்களை உண்டு பழகுவது மிகவும் அவசியமாகும்.

எது அரிய பிறவி?

(ஸ்ரீமான். தர்பன், கோ. இராமசாமி எழுதியது.)

கருத்துரை.

மனிதன் பிறந்ததிலிருந்து தான் உயர்ந்த பிறவி யென்றும், மற்ற மிருகம், பறவை முதலிய பிராணிக ளெல்லாம் மிகத் தாழ்ந்த தென்றும் கற்பிக்கப்பட்டு வந்திருக்கிறான். இதனால் மனிதன் மனிதப் பிறவிதான் அறிவுடைய தென்றும், மற்றப் பிராணிகள் அறிவில்லாதன வென்றும் பாவித்து அவைகளை அள வுக்கு மிஞ்சி வேலை வாங்குவதும், குறித்த காலத்தில் தீனி கொடாமல் வருத்துவதும், அடிப்பதும், கொன்று தின்பதுமான கொடு முயற்சியில் இறங்கிவிட்டான். மனிதனுக்கு இரவு பக லாய் உழைக்கும் வாயில்லா ஜீவன்களுக்குக் கொடுமை செய்வது பிரதிபலனா யிருந்தால், இதைவிட அநீதி வேறென்ன விருக்கிறது? மனிதன் உயர்ந்த பிறவி யென்று தவறாய்க் கற்பிக்கப்பட்டதின லல்லவோ மற்றப் பிறவிகள் அற்பமென்று நினைத்து அவைகளுக் குத் தீங்கு செய்ய ஆரம்பித்துவிட்டான். உண்மையில் மனிதப் பிறவி மற்றப் பிறவிகளைவிட உயர்ந்த பிறவியல்ல வென்பதை உள்ளபடி அறிவானானால் அப்போது இக்கொடு முயற்சி கொஞ் சங் குறையு மென்றே இக்கட்டுரை எழுதப்பட்டது. மனிதப் பிறவியே மிக இழிவான தென்று நமது ஆன்றோர்கள் அநேகர் கூறியிருக்கிறார்கள். அவர்களது கருத்தை யெல்லாம் திரட்டி ஒருவாறு இக்கட்டுரையில் ஆதாரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்நோக்கம் பற்றியே ஆங்கிலேயர்களும் விரிவான நூல்கள் எழுதியு மிருக்கிறார்கள். ஆகையால் நமது லக்ஷ்மியின் நேயர்கள் இதனை ஊன்றி வாசிக்கும்படி கோருகிறேன்.

பிறப்பு.

மனிதப் பிறவி மண்ணிற் பிறந்ததும் மாந்தர் போஷணையும் பாதுகாப்பும் பெற்று வளரக்கூடியதா யிருக்கிறது. மிருகம், பறவைகள், பிறந்ததும் பாதுகாப்பும் போஷணையு மில்லாமல் வளரக்கூடியவைகளா யிருக்கின்றன. அவைகளுக்குப் போஷணை யிருந்தாலும் கொஞ்ச காலத்துக்கே. மனிதர்களுக்கோ பிறந்து இறந்துபோமளவும் பிறர் பாதுகாப்பும் உதவியும் தேவையா யிருக் கிறது.

ஆகாரம்

ஆகார விஷயத்தில் பார்ப்போம். உலகிலுள்ள எல்லாச் சீவன்களுக்குச் சாக ஆகாரந்தான் கடவுள் படைத்திருக்கிறார்.

எது அரிய பிறவி?

இவ்வுலகம் ஏற்பட்டு எத்தனையோ கோடி ஆண்டுகளாயும், பறவை, மிருகம் முதலிய பிராணிக ளெல்லாம் அன்று முதல் இன்று வரையில் சாக உணவைத்தான் உண்டு வாழுகின்றன. மனிதர் களும் உலகத்தில் உண்டானபோது முதன் முதல் கீரை, கிழங்கு, தானியம், பழங்கள் முதலிய கந்தமூலங்களைத் தான் புசித்து வந்தார்கள். ஆனால், நாளடைவில் மச்சம், மாமிசம் முதலிய விதிக்கப்படாதவைகளையும் உண்ணத் தலைப்பட்டு விட்டார்கள். இதனால் மற்ற ஜீவர்கள் விதித்தபடி ஒழுகுபவைகளா யிருக்கின் றன. மனிதனே விதியை மீறி நடப்பவனா யிருக்கிறான்.

உணவுகளைத் தாமே தேடிக்கோள்வது.

மிருகம், பறவைக ளெல்லாம் வேண்டும் உணவுகளைத் தாமே தேடி உண்கின்றன. அவைகள் தேவைக் கதிகம் சேர்த்துக்கொள்வ தில்லை. அவைகளைப்போல், மனிதர்கள், தங்களுக்கு வேண்டும் உணவுகளைத் தாமே தேடிக்கொள்கிறார்களா? இல்லை. சிலர் உணவுப் பொருளை உற்பத்தி செய்யவேண்டும். சிலர் பக்குவஞ் செய்யவேண்டும். பலர் உண்ணவேண்டும். மிருகம், பறவைகள் பிறர் உற்பத்தி செய்த உணவுகளை உண்பதில்லை. மனிதனே பிறர் உண்டாக்குவதைத் தான் உண்கிறான். அப்படியாயின், மனிதன் பயிரிடும் வயல்களில் சென்று அவைகள் உண்கின்றனவே என்றால், குடிகள் பெருகிவிட்டதாலும், சிலர் ஏராளமான உணவுப் பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளலா மென்னும் பேரா சையாலும், இயற்கை உணவுகள் உண்டாகக்கூடிய காடுகளை அழித்துப் பயிராக்கப்பட்டமையால், அவைகளுக்குப் போதிய உணவு கிடைக்காமல் மனிதன் பயிரிடும் வயல்களில் வந்து உண் கின்றன. இது மனிதன் குற்றமே தவிர அவைகளின் குற்ற மல்ல.

நோய்.

மிருகம், பறவைக ளெல்லாம் கடவுள் விதித்த உணவுகளை உண்பதாலும், அளவோடு உண்பதாலும், அடிக்கடி வியாதிப் படுவ தில்லை. அதிக சத்துடைய சாக உணவுகளை உண்பதால், குதிரை, ஒட்டை, பசு, யானை முதலிய ஜீவர்கள் நல்ல தேக பலத் துடன் இருக்கின்றன. தானியங்களைத் தின்பதால் மயில், குயில், கிளிகள் எவ்வளவோ அழகாயிருக்கின்றன. மனிதன், விதிக்கப் படாத ஊன் உணவுகளை உண்பதினாலும்; அளவுக்கு மீறி உண் பதாலும், அடிக்கடி வியாதியாய்ப் போகிறான். அதனால், தேகத் தில் பலமும் பொலிவுங் குன்றி மந்த புத்தி பெற்றுக் கோபி யாகிப்போகிறான். இதோடு இரக்கமற்ற கொலையாளியாகவும் ஆகிவிடுகிறான்.

சகித்தல்.

பிராணிகள் நோய்பட்டால், தாமே சகித்துக்கொள்கின்றன. மனிதன் வியாதிபட்டால் சகித்துக்கொள்வதில்லை. நோயாளி வருந்துவதோடு அவனைச் சேர்ந்தவர்களும், வைத்தியர்களும், வருந்துகின்றனர். ஆஸ்பத்திரிகளுக்கும், மருந்துக் கடைகளுக்கும் கூட, அதிக வேலை எற்பட்டு விடுகின்றன. போதாக் குறைக்கு ஆடு, கோழி, புரு, மீன், ஆமை முதலிய ஜீவர்கள், சூப்பு, கழுப்பு, மருந்து முதலியவைகளுக்குப் பலியாக்கப்படுகின்றன. கொல்லப்படுகின்றன. இப்படியா மற்றப் பிராணிகள் செய்கின்றன? இதனால், அரிய பிறவி என்னும் மனிதனுக்குச் சகிக்கும் குணம் இல்லை என்பது தெரிகிறது. மனிதன் சகிக்கும் குணத்தை மற்றப் பிராணிகளிட மிருந்தாவது கற்றுக் கொள்ளட்டும்.

கொலை.

மனிதன் மற்றப்பிராணிகளைக் கொல்வது போலவும், தொந்தரிப்பது போலவும், வேறு எந்த ஜீவர்களும் செய்வதில்லை. மனிதனைப் பார்த்துப் பயந்தோடும் மீன், பறவை, மான் முயல் முதலியவைகளை வலை போட்டும், தூண்டில் போட்டும், துப்பாக்கியாலும், கொன்றுவிடுகிறான். பிறகு அதை வேட்டை என மகிழ்கிறான். வேட்டை என்பது துஷ்ட மிருகங்களைத் தேடிக் கொல்லல் என்பதை அடியோடு மறந்து விட்டான். அந்தோ! மனிதன் எதை எதைக் கொன்றானோ அதெல்லாம் அவனைக் கொன்றேதீரும். "கொன்றன அனைத்தும் நினைக் கொல்லும், தின்றன அனைத்தும் நினைத்தின்னும்" என்று பட்டினத்தடிகள் கூறியிருக்கிறார். இது போலவே வேறு சில பெரியோர்களும் கூறியிருக்கிறார்கள். கொல்லுந் தொழில் பெருங்கொடுந் தொழில். கொல்லு மிடத்திலிருந்து எழும் ஆவி அந்தரத்தில் சென்று சுத்த வாயுவை அசுத்த வாயுவாக்கி ஆகாயம் அகோரத்தன்மையாய் விடுகிற தென்றும், அத்தகைய இடத்துக்கும் போகிறவர்கள் இருப்பவர்கள் ஒரு வித கோர உணர்ச்சி பெற்றுத்தீய தொழில் செய்கிறார்களென்றும் ஆங்கிலேயர்களே எழுதியிருக்கிறார்கள். இதனை யெல்லாம் நன்குணர்ந்தே "கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே" எனத் தாயுமானவர் அருளியிருக்கிறார். ஆகையால் மனிதன் கொலையை விடுவானாக.

பரோபகாரம்.

மனிதன் பரோபகாரி யென்று கூறுகின்றனர். மனிதனைவிட மற்றப் பிராணிகளே மிகுந்த பரோபகார முடையவைகளாக விருக்கின்றன. உதாதரணமாக மாடு, கழுதை, குதிரை, ஒட்டை, யானை முதலிய பிராணிகள் தினந்தோறும் நிலம் உழவும், வண்டி யிழுக்க

தமிழ்நா... காப்பக ... 20360

வும், பொதி சுமக்கவும் உதவுகின்றன. அவைகளைப் போல் மனிதன் பிரதிபலனைப் பாராமல் உழைக்கிறானா? இல்லை. பேச்சு மட்டுமே. வேலைக்குக் கூலி குறைந்து விட்டால், கூலி இல்லை வேலை அதிகம் என்று நிந்திக்கிறான். வேறு சிலர் பரோபகாரமாய்ப் பிறர்நலுக்கு உழைப்பவர்கள் போல் காணப்படுகின்றனர். ஆனால், மனதில் பெருமை, கௌரவம், ஸ்தானம் வேண்டுமென அவாவி நிற்கின்றனர். ஆகையால், கைமாறின்றி உழைப்போர்; துறவிகளும் பிராணிகளுந்தான். மற்றவர் எல்லோரும் சுயநலம் பிடித்தவர்களே!

சாந்தம்.

மனிதன் சாந்த மயமாய் ஒழுக வேண்டுமென்பது கட்டளை. அப்படி ஒழுகுவதாய்த் தெரியவில்லை. ஜீவன்களை இரவு பகலாய் வேலை வாங்கினாலும், பொறுத்துக் கொண்டு வேலை செய்கின்றன. அப்படி மனிதனை வேலை வாங்கினால் உடனே வேலை நிறுத்தம், பகைத்தல் முதலிய சகல அனர்த்தங்களும் செய்து விடுகிறான். கோபம் வரப் பெற்றால், அப்போது மனிதன் செய்யும் தீத்தொழில் போல் வேறு எந்த ஜெந்துவும் செய்யாது. சாந்தமாய் நடப்பவர்கள் முனிவர்கள் தான். அவர்களே அரிய பிறவிகள்.

நன்றி.

நாய், குதிரை, பசு, யானை, புள்ளினங்களில் சில செய் நன்றியை மறப்ப தில்லை. செடி, கொடி, மரங்கள் கூடத் தண்ணீர் ஊற்றி வளர்க்கும் நன்றியை மறக்காமல்; கைம்மாறாகப் பூக்கள், காய்கள், பழங்கள் தருகின்றன. மனிதனே செய் நன்றியை மறந்து போகிறான். நன்றி செய்தவனுக்குச் சிறிதும் நினையாமல் தீமை செய்து விடுகிறான். கடைசியில் மனிதப் பிறவி நன்றி கெட்டதாயு மிருக்கிறது.

ஒற்றுமை.

பிராணிகள், பறவைகளைப் பார்க்கிலும், மனிதர்களிடம் அதிக ஒற்றுமையில்லை. தேனீக்கள் ஒற்றுமையுடன் தேன் கூடு கட்டுகின்றன. மனிதனே சபை, அல்லது ராஜ்ஜியத்தை ஒற்றுமையுடன் நடத்த முடியாமல் பிளவுபடுத்துகிறான். எறும்பு, கொக்கு, ஆடு, மாடு, குதிரை, யானை, குரங்கு முதலியவைக ளெல்லாம் எவ்வளவோ ஒற்றுமையோடு கும்பல் கும்பலாய் வாழுகின்றன. கூட்டங் கூட்டமாய்ச் சென்று இரை தேடி யுண்கின்றன. இரை தேடும்போது ஒன்றை யொன்று புசிக்கவிடாமல் தடுப்பதில்லை. மனிதரோ ஒரு இடத்திலிருந்து வாழக் கூடியவர்களாய்க் காணப்பட்டாலும், உண்மையில், செய்கையிலும் எண்ணத்திலும் வேறு பட்டவர்களாயிருக்கிறார்கள். பலர் இருந்து வாழக் கூடிய இடத்தில் ஒருவனே

இருந்து வாழ்ந்தால் போது மெனக் கருதுகிறான். கூடுமானால் எதிரி அநுபவிக்க விடாமல் தடுத்தும் பார்க்கிறான். ஒருவன் தேவைக் கதிகம் பொருளைச்சேர்த்து வைத்திருப்பதும் பலர் ஒன்று மில்லாமல் கிடப்பதும் மனிதப் பிறவியில் தான் காணப்படுகிறது. இக்கொடு முயற்சியால் செல்வரென்றும், வறிஞரென்றும் பிரிக்கப் பட்டு, சமத்துவமும், சகோதரபான்மையு மற்றுப் போகின்றனர். இதனால் பெரிய அனர்த்தங்கள் உண்டாகின்றன. அற்ப வயிறை வளர்க்க வெட்க மில்லாமல் போராடுகிறவன் மனிதனே. பிராணிக ளல்ல.

அறிவு.

மனிதன் அறிவுடையவ னென்றும், மற்றப் பிராணிகள் அறிவில்லாதவை என்றும் சிலர் அறியாமற் கூறுகிறார்கள். இதைச் சற்று நிதானமா யோசிப்போர் இதன் உண்மையை அறியலாம். எப்படி யெனில், மனிதன் இயற்கையில் அறிவு விளக்க மில்லாதவனா கவே காணப்படுகிறான். அருள் வடிவாகிய ஆசாரியர் போதனையால் தானே அறிவு விளக்கம் பெறுகிறான். அப்படிப் பெற்றும் எல்லா விஷயத்திலும் பூரண அறிவு பெறுகிறானா? அதுவு மில்லை. சிறிது இனிய குரலுடன் பாடும் ஒருவரைப் பார்த்துக் குயில்போன்ற குரல் என்கிறோம். நன்றாய் ஆடும் ஒருவரைப் பார்த்து, மயில்போல் ஆடுகிறார் என்கிறோம். பலவான் ஒருவரைப் பார்த்து, யானையை ஒத்தவ ரென்றும், சிங்கத்தை யொத்தவ ரென்றும், மற்றப் பிராணிகளின் சிறப்பை யெடுத்து மனிதர்களுக்குக் கூறுகிறோம். மயில், குயில்கள் ஆடவும், பாடவும், எவரிடம் கற்றுக் கொண்டன? மனிதனே பிறரிடமிருந்து கற்றுக் கொண்டு கெட்டிக்கார னென்றும் அறிவாளி யென்றும் பெருமை பேசிக்கொள்கிறான்.

அறிவுத் திறம்.

இப்பேர்ப்பட்ட மனிதன் அறிவுத் திறத்தால், என்னென்னவோ ஆச்சரியமான இயந்திரங்கள் கண்டுபிடித்து ஆகாயத்தில் பறக்கவும்; நீரில் மூழ்கி ஓடவும், நீந்தி ஓடவும், இன்னும் எத்தனையோ விதமான இயந்திரங்களும் செய்கிற னென்று பெருமை பேசுகிறான். அவைகளைச் செய்வதற்கு எவ்வளவோ காலச் செலவும் பணச் செலவும் ஏற்படுகின்றன. அவ்வளவையும் செலவழித்து மனிதன் கற்றில் கற்றுக் கொண்டது பறவை மீன்களின் அறிவுகளைத்தான். இந்த ஜீவன்களின் அறிவைக் கையாடுவதற்கு இத்தனை கஷ்டங்களும் பணச் செலவும் ஏன்? இப்படி எல்லாம் கஷ்டப்பட்டுக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களால் மனிதனுக்கும் மற்ற ஜீவன்களுக்கும் தீமையே தவிர நன்மை சிறிது மில்லை. ஆச்சரியமான இயந்திரங்களால் மனிதருக்குப் பிழைப்பு அகப்படாமல் சோற்றுக்

கும் துணிக்கும் வருந்துகிறார்கள். கைத்தொழில்கள் நசித்துப் போகின்றன. இயந்திரங்கள் பஞ்சம் உண்டாக்கின என்று இந்தியரும் ஆங்கிலேயரும் ஒருங்கே ஒப்புக் கொள்ளுகின்றனர். கடைசியில் மனிதன் அறிவு ஆற்றலால் ஏற்படும் நவீன முறைகளெல்லாம் அவனுக்கும் மற்ற ஜீவன்களுக்கும் சகல விதத்திலும் இடையூறு உண்டாகத்தான். இஃதெல்லாம் ஏற்படாத காலத்தில் நாட்டில் செல்வம் மலிந்து கிடந்தது. இப்போது வெறும் இரும்புகள்தான் மலிந்து கிடைக்கின்றன.

ஐந்தறிவு.

மனிதருக்கு ஐந்தறிவோடு பகுத்தறிவும் ஒன்றிருக்கிறபடியால் மற்றப் பிராணிகளை விட மனிதன் உயர்ந்த பிறவி யென்று பேசுகிறார்கள். அறிவென்பது மெய், வாய், கண், செவி, மூக்கு. என ஐந்து. இவ் வைந்தறிவுகளும் பறவை மிருகங்களுக்கும் உள்ளன. இப்பஞ் சேந்திரியங்களால், மனிதர் முதல் மற்றப் பிராணிகள் வரை சரியாய் இன்ப துன்பங்களை அநுபவிக்கின்றன. இனி இவ் வைம் புல அறிவு ஜீவன்களுக்குப் பிறந்ததும் உண்டாகிறதில்லை. நாளடைவில் தான் உண்டாகின்றன. உதாரணமாக, ஒரு குழந்தைப் பிறந்ததும் அதற்குக் கண்ணிருந்தும் பார்க்கிற சக்தியில்லை. காதிருந்தும் கேட்கிறதில்லை. மூக்கிருந்தும் வாசனை அறிவதில்லை. நாக்கிருந்தும் சுவை பார்க்கிற சக்தி யில்லை. இதெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் ஏற்படுகின்றன. "மட மயில் கொங்கை யமுத மருந்தி ஓரறி வாகி ஈரறிவாகி" என்று உடற் கூற்று வண்ணம் கூறுகிறது. அறிக.

ஆறறிவு.

ஆறறிவைப் பார்போம். நன்மை இது வென்றும், தீமை இது வென்றும், அறிந்து தீமையை யொழித்து நன்மையைச் செய்வதே ஆறுவ தறிவு, அல்லது பகுத்தறிவு எனப்படும். வகுத்தறிவுடையோர், உலகில் உண்டான பொருள்க ளெல்லாம் கடவுளால் உண்டானவை என்றும் உயிர்க் கூட்டங்க ளெல்லாம் ஒன்றிற் கொன்று உயர்வு தாழ்வு இல்லை என்றும், எல்லாம் சமத்துவமும் சகோதர பான்மையும் உடையவை என்றும், உலகில் நடை பெறுஞ் செயல்கள் யாவும் கடவுள் செயலென்றும், தாம் பிறர்க்காகவே பிறந்திருப்பதாக அறிந்து ஒழுகுவோரே ஆறறி வுடையவர்கள். இவர்களைத் தொல்காப்பியர் "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றார். ஆராய்ந்தறிக! இப்படி நடப்போர் நம்மில் எத்தனை பேர்? ஆயிரத்தில் ஒருவர் இருப்பதும் அரிதே! எங்கேயோ இலை மறை காய் போல் ஆறறிவினர் துறவிகள் தான் இருக்கின்றனர். மற்றவர் எல்லோரும் ஐந்தறி வுடையவர்களே எல்லோரும் ஆறறிவினரா யிருப்பின்;

உலகம் இன்ப மயமாக அல்லவோ திகழும்; அப்படி யில்லாமல் பொய்யும் புனை சுருட்டும், புலையுங், கொலையும், களவும், அநீதியும், அக்கிரமங்களுமே மேலோங்கி யிருப்பதால்; தரணியில் தனக்கென வாழ்வோரே மிகுந்துபோயினர் என்பது எளிதில் புலனாகிற தல்லவா? ஆகையால் இவர்களெல்லாம் எப்படி ஆறறிவுடையவர்கள்? இவர்க ளெல்லாம் ஐந்தறிவுடையவர்களே. இதற்கு ஆதாரம் "மாவு மாக்களும் ஐயறிவினவே" என்று தொல்காப்பியம் கூறுகிறது காண்க!

உடல் உறுப்புகளின் உபயோகம்.

மற்றப் பிராணிகளின் உடல் உறுப்புகள் எப்படிப் பயன்படுகின்றனவோ, அப்படி மனிதன் உடல் உருப்புகள் உபயோகப் படுவதில்லை. கோழி, ஆடு, ஒட்டை முதலியவைகளின் மயிர் தலைக்கணையாகவும் உயர்ந்த ஆடைகளாகவும், ஆக்கப்படுகின்றன. இவை யின்றி வேறு விதமான தலைக்கணைகளையும், ஆடைகளையும், மனிதன் இன்னுங் கண்டு பிடிக்கவில்லை. ஆடு, மாடுகளின் தோல்கள்; சப்பாத்துகளாகவும், இயந்திரசக்கரங்களை இழுக்கும் பட்டைகளாகவும், இன்னும் எத்தனையோ விதமான வேலைகளுக்கும் உதவுகின்றன. எலும்புகள் பயிர்களுக்கு எருவாகவும், சட்டைகளுக்குப் பொத்தான்களாகவும், கத்தி கோல்களுக்குக் கைப்பிடிகளாகவும் ஆக்கப்படுகின்றன. உயிர் நீங்கிய ஜீவர்களின் உடல்களைப் பக்குவஞ் செய்து அழகின் பொருட்டு வீடுகளிலும் கண் காட்சி சாலைகளிலும் வைக்கப்படுகின்றன. இப்படி யெல்லாம் மனிதன் தேக உறுப்புகள் உபயோகப்படுவதில்லை. செத்ததும் குளிப்பாட்டிக் குழியில் போட்டுப் புதைத்து விடுகின்றனர். அல்லது நெருப்பிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கி விடுகின்றனர். உயிர் நீங்கியவர் வீடு தீட்டாகப் பாவிக்கப்படுகிறது. எத்துணை உயர்ந்தவராயினும், உயிர் உடலைவிட்டுப் போய்விட்டால், அவ்வுடல் மண் மயமாகக் கருதப் படுகிறது. பிணமிருக்கிற வீட்டில் சமைப்பதும், உண்பதும் கூடாதென இந்துக்கள் நினைக்கிறார்கள். ஆகவே, இவ் வுதாரணங்கள் மனித உறுப்புகள் உதவியற்ற தென்பதற்குப் போதுமானது.

பிராணிகள் செத்தாலும், உயிரோ டிருந்தாலும், பயன்படுவது போலவே மனிதனும் பயன்படவேண்டு மென்பதே ஆன்றோர் கருத்து. ஆனால் அப்படிச் செய்வதில்லை. மனித சவத்தை கழுகு, நரி முதலியன தின்று பயன்படச் செய்யலாம். மனிதன் அப்படிச் செய்யாமல் மண்ணில் புதைத்துப் புழுத்துவிடச் செய்கிறான். ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள், பட்டினத்தடிகள், கழுகு, நரி முதலியவைகளுக்கு உபயோகமான மனித சரீரம் என்று கூறி யிருக்கிறார்கள். திருவள்ளுவரும், தாம் கால வியோகமானதும் தனது உடலை ஊருக் கப்புறம் எறிந்து கழுகு, நரி முதலியவைகளுக்குப் பயனாக்

கும்படித் தனது சீஷன் ஏலேல சிங்கனுக்குச் சொல்லி மாண்டார் என்று திருக்குறள் சொல்லுகிறது. திருவள்ளுவரைப் போல் செய்வோர் நம்மில் எத்தனை பேர்? ஒருவரு மில்லை.

பயனற்ற உடல்.

இதனால் அல்லவோ ஆன்றோர் எல்லோரும் மனித தேகம் வீணான தென்றும், ஆபாசமான தென்றும் கூறினர். சிவ வாக்கியரே "ஓடு பெற்ற தவ்விலை பெறாது காணிவ் வுடலமே" என்றார். "ஊத்தைக் குழியிலே மண்ணை யெடுத்தே உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே வாய்த்த குயவனார் மண்ணும் பாண்டம் வர கோட்டுக் காகாதென் றாடாய் பாம்பே" எனப் பாம்பாட்டிச் சித்தரும் பாடினார். "பந்த உடல் சிசிதூர்க் கந்த உடலொன்றுக் காகாத உடல் வைத்துப் பார்த்து மென்ன வலிய உயிர் மாய்த்துச் செத்துப் போனாலு நல்லதே" என அருணகிரி நாதரும் அருளினார். "தீண்டா வழும்புஞ் செந்நீரும் சீயும் நரம்புஞ் செறி தசையும் வேண்டா நாற்ற மிகு முடலை வீணே சுமந்து மெலிவேனோ," என அழகிய மணவாள தாசரும் நவின்றார். பட்டினத்தடிகளும் "ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை," என்றார். பத்திரகிரியாரும் "ஊத்தைச் சடலம் விட் டுனை அடைவ தெக்காலம்" என்றார். ஔவையாரும் "எல்லாப் படியாலும் எண்ணினா லிவ்வுடம்பு பொல்லாப் புழுமலிநோய்," என்றார். இதுபோன்ற உதாரணங்கள் பல வுள. இதை யெல்லாம் நன்கு ஆராய்வோமானால் ஊற்றைச் சரீரம் பெற்று ஒன்றுக்கும் உதவாத மானிடப் பிறவியை அரிய பிறவி யென்று பெருமை பேசமாட்டோம்.

விதியின் வன்மை.

மனித தேகம் அரிதாய் வாய்த்த தென்றும், இதைக்கொண்டு என்னென்னவோ சாதித்து விடலா மென்றும், விதியைக்கூட மதியால் வென்று விடலாமென்றும், மார்க்கண்டன் விதியை மதியால் வென்று விட்டானென்றும், அதுபோல் நாமும் வென்றுவிடலா மென்றும் சிலர் பேசுகின்றனர். விதியை வெல்வது எள்ளத்தனையும் முடியாத காரியம். வென்றுவிடலாம் என்னுங் கொள்கையும் நூல்களில் இல்லை. இதுபற்றியே "விதிப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாய அனைத்தாய நூலகத்து மில்லை" என ஔவை அருளி யிருக்கிறார். எத்துணைச் சித்தி பெற்றவராயினும் இன்ன வயதில் இப்படி மாளுவர் என்னும் விதி யிருந்தால், அப்படியே தான் முடியும். சாதாரண மானவர் கூட "எல்லாம் விதிப்படி ஆயிற்று," என்று கூறுகின்றனர். திருவள்ளுவரும் "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்று விதியின் வலிமையைப் பாடி யிருக்கின்றார்.

தேகத்தின் அழிவு.

நீண்டகாலம் யோகம் பயின்று உயிரோடிருந்து வாழக்கூடிய ஆற்றல் பெற்ரோர்கூட, விதிப்படி இறுதியில் மாண்டுதான் போவார். பிறந்துபோன சரீரத்தை இறக்காமல் நிலையாய் வைத்துக்கொள்ள உலகில் மார்க்கமே இல்லை. திருமூலர் மூவாயிரம் ஆண்டு யோகம் பயின்று அநுபவ அறிவை யெல்லாந் திரட்டித் திருமந்திரம் ஆக்கினர். அவரும் இறுதியில் மாண்டுதான் போனர். பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகணிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கொங்கணவர், காளாங்கிநாதர், போகமுனிவர் முதலிய காயசித்தி பெற்ரோரும் கால வியோகமே ஆயினர்.

ஆயிரம் ஆண்டிருப்பினும் அழிவே.

"ஆண்டொரு நூறுகற்ப மௌஷத மூலி யுண்டு நீண்டதோர் காயசித்தர் நெடுநாளைக் கிருந்தபேரும் மாண்டுதான் போவாரல்லால், வையகத் திருப்பாருண்டோ?" என நெஞ்சறி விளக்கம் நிருவுகின்றது. "எந்நா ளிருந்து மநித்தியமே" என்றும்; "இந்த உடல் காய மிறந்து படு மிவ்வுலகில்" என்றும், திருவள்ளுவர் ஞானம் கூறுகிறது. "நீரிலெழு குமிழி நிலைகடல்போல் நில்லாதுடல் நீங்கிவிடும் நிச்சயமென்றே" என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடியுள்ளார். "மாறுன வாழ்வடைந்தோர் இறந்தரையா மாண்டவர்கள் வெகு கோடி மாய வாழ்க்கை" எனச் சட்டமுனி ஞானமுங் கூறுகிறது. "சாவாத தில்லை பிறந்த உயிரெல்லாம்" எனச் சங்க நூல் நான்மணிக்கடிகையும் நவிலுகிறது. "நில்லா வுடம்பை நிலையென்றே நேசிக்கும் பொல்லாத நெஞ்சம்" என இராமலிங்க சுவாமிகளும் அருளினர். "வெந்து விழு முடற் பிறவி" என்றும், "மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டு விழக்கடவேனை" என்றும் திருவாதவூரடிகளும் பாடியுள்ளார்.

எல்லாம் அழியும்.

இன்னும் ஆழ ஆராய்வோமானல், நமது கட்புலனகும் எல்லாப் பொருள்களும் கால அளவுப்படி அழிந்தே போகும். படைத்தல் தொழிலில் இருக்கும் பிரம்மனுக்கும் சாவு இருக்கிறதென்றும், உலகம் உண்டானதிலிருந்து நான்கு பிரம்மாக்கள் மாண்டார்கள் என்றும், இப்போது ஐந்தாவது பிரம்மா, படைப்புத் தொழிலில் இருக்கின்ருரென்றும், சேலம் நரசிம்மலு நாயுடு அவர்கள் எழுதிய ஆரியர் சத்தியவேதம் கூறுகிறது. இதனல் பிரம்மாவுக்கும் சாவு உண்டு என்ருல் மற்ற ஜீவர்களைப் பற்றிக் கூறவேண்டுமோ? அழிவு இல்லாதவர் கடவுள் ஒருவரே! மற்றப் பொருளெல்லாம் மாளக்கூடியதே.

எது அரிய பிறவி?

"காண்பது மழிந்து போகும்
காயமும் அழிந்து போகும்
ஊண் பொருள் அழிந்து போகும்
உலகமும் அழிந்து போகும்"

என நெஞ்சறி விளக்கம் சொல்கிறது.

பிறவி வேண்டாம்.

இதை யெல்லாம் நன்குணர்ந்தே மேலோர் இத்தேகம் கடிது ஒழிந்து போகவேண்டு மென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறிய தெல்லாம் நமக்குச் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் தான். தொண்ட ரடிப் பொடி யாழ்வார், "பசிப்பிணி மூப்புத் துன்பம் ஆதலால் பிறவி வேண்டேன்" என்றார். "பட முடியா தினித்துயரம் படமுடியா தரசே" என்று இராமலிங்க சுவாமிகளும் பாடினார். "முடியேனினிப் பிறவேன் பெற்றின் மூவேன் பெற்ற மூர்த்தி" என்று சுந்தரரும் பாடினார். "நிலத்தி லெனையே பகைத்தொடரும் நேரில்லாப் பாழ்ப் பேருடலம் மாண்டு விழவே யருள் புரிவாய்" என அவையாம்பிகை சதகமுங் கூறுகிறது.

பிறவி முத்திக்கல்ல.

இனி மனிதப் பிறவி பெற்றது முத்தி யடைதற்கெனக் கூறி னும் அதுவும் பொருத்த மில்லை. சடம் பெற்ற ஆன்மா கடவுளின் அருள் பெறுதற்கும், முத்தி யடைதற்கும் பெருங் கஷ்டப்படுகிறது. "ஊனென்ற பிறந்த சடம் பிறவா முத்தி" எனச் சூரியாநந்தர் சூத்திரமும் "ஈனப் பிறவியின் மூழ்கின லினிதாகு நின்னருள் எங்குறும்" என்று குருநாத சதகமும் "உடம்பிரண்டுங் கெட்டா லுறு பயனுண்டு" என ஔவைக் குறளுங் கூறுகின்றன. இவற்றால் இத்தேகம் கெட்டால்தான் பேரின்பம் எய்தப்படும் என்பது நன்கு தெளிவாகின்றது. அல்லவோ! பெண்டு பிள்ளைகளை உடைய ஒருவன் அவர்கள் உண்டு வாழப் பொருள் தேடுவதில் காலத்தைச் செலவழிப்பானே தவிர ஆன்ம விசாரணைப் புரிந்து கடவுளைக் காண காலத்தைக் கழிக்கான். அதுபோல் ஆன்மா தேகம் பெற்று ஐம்புலனுக்கு இரையூட்டி அவதிப்படுகிறதே யொழிய இறைவன் திருவடி நிழல் எய்துவதற்கு முந்துவ தில்லை.

தேகம் பெற்றால் அறியும் ஆற்றல்.

தேகம் பெற்றதால் எல்லா விஷயங்களையும் அறியும் ஆற்றல் ஆன்மாவுக்கு ஏற்பட்ட தென்றாலும் அதுவு மில்லை பாழுந் தேகத் தில் ஆன்மா வசிக்கிற வரையில் அதன் அறிவு மந்தப்பட்டு போகி றது. உண்மை அறியக்கூடாததாகவும் இருக்கிறது. சடமற்ற ஆன்மா பின்னால் நேரப்போகும் விஷயத்தை முன்னறிந்து

சொல்லக்கூடிய திறன் உடையது. உதாரணமாக ஆவேசம் வந்த ஒருவர் தன் மெய் மறந்தபோதே மெய்யறிவு பெறுகிறார். உடனே வந்தவர்க்கு நீர் இன்னதை நாடி வந்தீர் இன்னது நேரும் என்று சொல்லிவிடுகிறார்.

சரித்திரத்தில் அசரீர வாக்கு என்று அந்தரத்தில் வந்து பின்னால் நேரும் சங்கதிகளை முன் கூறி அதன்படி நடந்திருக்கிற சம்பவங்களைப் படித்திருக்கிறோம். தேக மற்றப் பரிசுத்த ஆன்மாவின் பேச்சே அசரீர வாக்கு எனப்படும். கல்லைக் கட்டிய காற்றாடி மேலே பறக்க முடியாதது போல் உடம்பு பெற்ற ஆன்மா உயர்ந்த நாட்டத்தில் செல்லாமல் உலக விஷயங்களாகிய மூட்டைகளைச் சுமந்து கொண்டு கலங்கி உண்மை நெறி யறிந்து செல்லும் ஆற்றவில்லாமல் பிறவி வட்டத்தில் சுழன்று சுழன்று மோகம் நுகர்ந்து கொண்டு கிடக்கிறது. இதனா லல்லவோ ஆன்றோ ரெல்லாம் இக் கொடும் பிறவியால் பயனில்லை என்று வெறுத்தனர். சிலர் உணவால் போஷிக்காமலும்; உடையால் சரீரத்தை மூடாமலுங் கூட இருந்தார்கள். தேகத்தைப் பற்றியே அக் கரை யற்றவரா யிருந்தனர். பட்டினத்துப் பிள்ளையார், முதலியோர் இச் சரீரம் மல மூட்டை யென்றே கூறி யிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மல மூட்டையை உயர்ந்த தென்றும் அரிதான மூட்டை யென்றும் கூறுவது வீணே.

கன்மத்துக்குப் பிறப்பு.

பின் எதற்காகப் பிறந்தோ மென்றால், முற் பிறப்பிற் செய்த கன்மத்தைத் தீர்க்கவே பிறந்திருக்கிறோம். அவ்வினைகளை அநுபவித்தானதும், தேகம் ஒரு கணமும் நில்லா "வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய் வினைதா னொழிந்தாற் றினைப் போதளவு நில்லாது கண்டாய்" எனப் பட்டினத்தடிகள் கூறியதைக் காண்க! ஆகையால் கன்மத்தைத் தொலைக்க வந்தப் பிறவியை அரிய தென்றும் முத்தி யடைதற்கு ஏற்பட்ட தென்றும் கூறுவோர் இம்மை உலகில் மனிதன் தன்னைப்பற்றிய உயர்ந்த எண்ணங் கொண்டு உலக விஷயங்களில் மேனோக்கிச் செல்வதற்கே யன்றி வேறல்ல. இவ்வுட் பொருளைப் பலர் அறியாமல் அகங்காரங் கொண்டு மனிதன் அரிய பிறவி யென்றும் மற்றப் பிராணிகள் தாழ்ந்த தென்றும் அவைகளைத் தொந்தரவிப்பது பெரும் மூடத்தனமே யாம்.

ஆதலால், இதுகாறுங் காட்டிவந்த ஆதாரத்தால் மனிதப் பிறவியை விட மற்றப் பிறவிகளே எல்லாப் படியாலும் மேலானதா யிருப்பதை அறிவாராக! ஈசுவர சிருஷ்டியில் மனிதன் உயர்ந்த பிறவி என்றும், மற்றப் பிறவிகள் தாழ்ந்த தென்றும், பேதம் உண்டோ? கூறுங்கள். மனிதனே மூடத் தனத்தால், கடவுள்

படைப்பில் உயர்ந்தது தாழ்ந்தது கற்பிக்கிறான் என்பதை மனிதன் அறிந்து எவ் வுயிரையும் துன்புறுத்தாமலும், கொன்று தின்று விடாமலும், அவைகளிடம் அன்பு கொண்டொழுகுவானாக! ஈசனெக் கருதி எல்லா உயிரையும் நேசத்தால் நீ நினைந்து பார்.

பானுபாய்

(ஏ. சொக்கலிங்கம் பிள்ளை.)

XXI

உடன்படிக்கையின் பிரகாரம் தவணைக்காலம் இன்னும் முடியவில்லை. ஆகையால், படானியர் தலைவருக்குப் பானுபாயைத் தம் மனைவி யாக்கிக்கொள்ள உரிமை யில்லை. அவர், அவள் மீது வைத்த காதல் மிகுதியால் பித்துக்கொண்டவரா யிருந்தும் அவளைப் பெற முடியவில்லை. அவளை எப்போது அடையலா மென்னும் நினைவைத் தவிர வேறு காரியங்களை எல்லாம் அறவே மறந்தனர். அவளது அழகெனும் வெள்ளத்தில் அகப்பட்டுத் தபித்தவராய்த், தமது இச்சை பூர்த்தியாகும் நாளை விரலெண்ணுங் கணக் கண்டிருந்தனர். அவர் அங்கிலையி லிருக்கும்போது, அவரது சேனாபதிகள் மொகலாயர் சேனை அணுகிவருவதை அவருக்குத் தெரிவித்தனர். அவ்வாறு தெரிவித்தவர்களை அவர் கடிந்துகொண்டனர். அதனால் அவர்கள் நவாபின் மீது வெறுப்படைந்து ஒன்றும் பேசாது போயினர். நவாப் அவர்கள் தமது அசட்டுத் தனத்தாலேயே தமக்கு அழிவு தேடிக் கொள்ளுகிறார்களென்று, அவருக்கு நம்பிக்கையுள்ள உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிந்ததினாலே அவர்களும் மனங்கசந்து ஒருவ ரொருவராக அவரது நியாய சபையை விட்டு நீங்கினர். இஃது இவ்வாறாக,

ஒரு நாள் வேலைக்காரி ஒருத்தி பானுபாயினிடம் வந்து "எம்பெருமாட்டி! இராஜபுத்திர யுத்த வீர ரொருவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்றாள்.

அதனைக் கேட்ட பானுபாய் வியப்படைந்து "யாரவர்? என்னைப் பார்க்கவேண்டுமா?" என்றாள்.

"ஆம், இராஜபுத்திர வீரர். அவர், நான் உங்களுடைய வேலைக்காரி என்று எப்படியோ தெரிந்துகொண்டு என்னிடம் வந்தார். அவர் உங்களைக் கண்டு பேச நான் ஏற்பாடு செய்வேனானால், அவர் எனக்கு ஐந்நூறு மொகராக்கள் வெகுமானஞ் செய்வதாக உறுதி மொழி கூறி யிருக்கின்றனர்."

"எனக்குத் தெரியாத ஒரு இராஜபுத்திர வீரரை நான் ஏன் பார்க்கவேண்டும்?"

"அவர், உங்களைத் தெரியு மென்று சொல்லுகிறார். அவர் உங்களைச் சிரோமணியார் கல்லூரியில் பார்த்திருக்கக் கூடும். ஆனால், அவர் மொகலாயர் சேனையைச் சேர்ந்தவரானதால், தம்மை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மறைத்துக் கொள்ளுகின்றார்."

"அவர் என்னைப்பற்றி எப்படித் தெரிந்துகொண்டார் என்பது எனக்குத் தெரியவில்லை."

"அவர் உங்களைத் தேடிக்கொண்டே டெல்லி யிலிருந்து வருகிறதாகச் சொல்லுகின்றார். அவர் சிரோமணியார் கல்லூரிக்குச் சென்று, அங்கே உங்களுடைய தற்காலம் இருக்கு மிடத்தைத் தெரிந்துகொண்டாராம். உங்களுடைய கணவரிடம் இருந்துதான் வந்திருக்கிறாராம். அவர் உங்களைப் பார்க்கவேண்டுமாம்."

"கணவரிடமிருந்து " என்று சொன்னதைக் கேட்டதும் பானுபாய் முகம் ஆச்சரியத்தால் வேறு பட்டு "யாரிடமிருந்து?" என்று மிக்க ஆவலுடன் கேட்டாள்.

"ஆம், உங்களுடைய கணவர் அநந்த ராயினிட மிருந்தே" என்றாள். அநந்தரா யென்னுஞ் சொல்லைக் கேட்டதும் பானுபாய் உள்ளக் கிளர்ச்சியால் உடல் நடுங்கித் திகைத்து நின்றாள். பின்னர் ஒருவாறு தன்னை அடக்கிக்கொண்டு, "நல்லது, நான் நாளை உச்சிப் போதில் அரண்மனைப் பின்புறத் தோட்டத்தின் கிணற்றண்டை இருப்பேன், அங்கே அவரை, பிறரறியாதபடி தோட்டத்தின் வாயிலின் வழியாய் அழைத்து வா" என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கி, அதி விரைவாகத் தன் அந்தப்புரஞ் சென்று, வாய்விட்டுக் கதறாமல் அழுதுகொண் டிருந்தாள்.

மறுநாள், பானுபாய் கிணற்றைச் சூழ்ந்திருந்த மேடையின் மீது ஏதோ சிந்தனை யுள்ளவளாய் உட்கார்ந்திருந்தபோது, யுத்த வீர ரொருவர் ஓர் மரத்தின் பின்புற மிருந்து வந்து, மரியாதையோடு வந்தனம் புரிந்து, பானுபாய்க்கு எதிரே நின்றனர். அவரைப் பானுபாய் வணக்க ஒடுக்கத்துடன் பார்த்து "இராஜபுத்திர வீரரே! தாங்கள் என்னைப் பார்க்க வேண்டுமா?"

"ஆம், பெருமாட்டி! தங்களைக் காணும்படி இராஜா அநந்தராயவர்களால் நான் அனுப்பப்பட்டேன்" என்றார் சுதான்யமல்.

"இராஜா அநந்தராயா?" என்று வியப்புற்றுக் கேட்டாள்.

"ஆம், டெல்லிச் சக்கரவர்த்தியா ரவர்கள். அவருக்கு 'இராஜா' என்னும் பட்டமளித்து, பதினாயிரம் பலத்த சேனைக்குத்

தளகர்த்தராக்கி, வங்காள தேசத்திற்குச் சுபேதாராக நியமித்து, மகா வீரம் பொருந்திய சேனையோடு இங்கு அனுப்பி யிருக்கின்றார்.''

''ஆயின், நவாப் அவர்கள் அவரோடு சண்டைக்குப் போயிருக்கின்றார்.'

''ஆம், அவர், தம்முடைய சேனையுடன் இராஜ மஹாலுக்கு வந்திருக்கின்றார். அவர் தாங்க ளிருக்கு மிட மறிந்து வரும்படி என்னை அனுப்பினார்.

''உங்களிடத்தில் எத்தனை யுத்த வீரர்க ளிருக்கின்றனர்?'

''இருபதினாயிரத்துக்கு மேல்.''

''நவாப் அவர்கள், ஐம்பதினாயிரம் பலத்த சேனையுடன் போயிருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன்.''

''பத்துலட்சம் படானியப் போர்வீர ரானாலும், ஓராயிரம் மொகலாயர் சேனை முன்னே நிற்க முடியாது.''

''அக்பர் சக்கரவர்த்தியார், உங்களைப்போன்ற இராஜ புத்திர வீரர்களின் பலத்தை நம்பித் தமது மொகலாயர் ஆட்சியைத் தாபிக்கிறதாக நான் கேள்விப்படுகிறேன். நீங்கள் அவ்வளவு பலசாலிகளா யிருப்பீர்களானால், என், நீங்கள் மீண்டும் இந்து இராஜ்ஜியத்தைத் ஸ்தாபிக்கலாகாது?''

''பெருமாட்டி! அது சாத்திய மாகாது. இந்தியாவில் ஒரே ஜாதி ஜனங்கள் வசிக்கவில்லை. நானா பேதமுள்ள மதங்களும் ஆசாரங்களும் வழக்கப் பழக்கங்களுமுடைய எண்ணி லடங்காத ஜாதிக ளிருக்கின்றன. இந்த .ஜாதியார்கள், இன்னும் அறிவு விருத்தி யடையவில்லை. உலக நீதிகளை யுணர்ந்தார்க ளில்லை. இவர்கள் இன்னும் அஞ்ஞானத்திலும், மூட பக்தியிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். இந்தச் சனங்களுக்கு மனச்சான்றுக்கு ஒத்த ஒழுக்கமில்லை. இந்தியாவில் எல்லாச் சாதியார்மீதும் அதிகாரஞ் செலுத்தக்கூடிய ஒரு சாதியேனும் அல்லது ஒரு பிரபுவேனு மில்லை. இந்து ஆட்சியை மீண்டும் ஸ்தாபிக்க முயலுவது, தேசத்தில் அரசனில்லாம லாக்கித் தேசத்தை ஊர்க் கலகத்தில் வீழ்த்துவ தாகும். அன்றியும், ஜனக் காட்சிக்காகக் கூடுகளி லடைந்து கிடக்கும் உயிருள்ள துட்ட மிருகச் சாலையைத் திறந்து விடுவது போலாகும். ஆதலால், அக்பரைப் போன்ற நீதி நெறியும், தரும குணமும், பொருந்தியவரை, நாம், நம்முடைய சக்கரவர்த்தியாகப் பெறுவது தேசத்திற்கும், நமக்கும், மகத்தான நன்மை உண்டாகும். அந் நோக்கத்தைக்கொண்டோ இராஜ புத்திரத் தலைவர்களெல்லோரும், மகா அக்பர் சக்கரவர்த்தியின் சிங்காதனத்தைச் சூழ்ந்து அவரை மொய்த்துக்கொண்டி ருக்கின்றனர்.

எவரேனும் சக்கரவர்த்திக்கு விரோதமாக எழுவா ராயின், அவர் தம் அழிவைத் தாமே நாடுவா ராவர்.''

"ஆயின், பரதகண்டமுள்ள நாளளவும் அது, அன்னியனு டைய அடிமையாகவே யிருக்கும்.''

"அடிமைத்தன மாகாது பெருமாட்டி! சிநேக பான்மையே யாகும். மொகல் சக்கரவர்த்தியார் நம்மை நீதியாக ஆட்சி புரிவார். தேசத்தில் அமைதியை ஸ்தாபித்து ஜனங்களின் நன்மையை விருத்திசெய்வார். அவர், இந்துக்களை நம்பிக்கையுள்ள உத்தியோ கங்களில் நியமித்திருக்கின்றார். அவர், இந்துவென்றும், மகமதிய ரென்றும் பேதம் பாராட்டுபவ ரல்லர். அவருக்கு, மந்திரி முத லான உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுப்பதில், அவரவருடைய யோக்கியதையே வழிகாட்டியா யிருக்கும்''

"மொகலாயரும் நீதி யற்றவர்களானால்?''

"பெருமாட்டி! அவர்களும் பட்டாணியரைப் போலவே நாச மடைவார்கள்.''

"சரி, அநந்தரா யவர்கள், எப்படி மொகலாயருடைய ஊழிய ரானார்? அதனைச் சொல்லப் பிரார்த்திக்கின்றேன்''

"பெருமாட்டி! அவரை ஊழிய ரென்று சொல்லாதீர்கள். ஆனால், அவர் மொகலாயர் நண்பரே யாவர்'' என்று வணக்கமாய்க் கூறினார் சுதான்யர்.

அதற்குப் பானுபாய் ஒன்று முரையா திருந்தனள். சுதான் யர், அவளுக்கு அநந்தராய் இத்தகைய உயர்பதவிக்கு வந்த வர லாற்றை யெல்லாம் ஆதியோடந்தமாக விவரித்துக் கூறினார். பிறகு, பானுபாய், சுதான்யரிடம், "நான் எழுநாட்களுக்குப் பின் னர் நவாபவர்களின் 'பேகம்' ஆவதாக வர்க்களித்திருக்கின்றேன். அநந்தராய் என்னைக் காப்பாற்ற விருப்பமுள்ளவராயின், அவர் இவ் வேழு நாட்களுக்குள்ளாக இங்கு வருதல் வேண்டும்'' என்று கூறி னாள்.

"பெருமாட்டி! உறுதியாய் நம்புங்கள். அங்ஙனமே நாங்க ளிங்கு வருவோம்.''

"இல்லையேல், நீங்கள் என்னைக் காண மாட்டீர்கள்.''

பின்னர் சுதான்யர் விடை பெற்றுக்கொண்டு திரும்பினர். பானுபாய் தன் அந்தப்புரம் போயினள்.

XXII

சுதான்யர் பேசிவிட்டுப் போன இரண்டு நாட்களுக்குப் பிறகு ப்பட்டாணிய நவாப் அவர்கள், பயத்தால் உடல் நடுங்கிப் பெருமூச் செறிந்து, தம் அந்தப்புரத்திற்கு விரைந்தோடி வந்து, தமது மனை

வியைப் பார்த்து "நீ உயிரோடிருக்க விரும்பினல், சீக்கிரம் இவ் விடத்தை விட்டுப் புறப்படு. என்னுடைய யுத்த வீரர்களும் நம்பிக் கையுள்ள உத்தியோகஸ்தர்களும் என்னைவிட்டு விலகினர்கள்" என்ருர்.

அதனைக் கேட்ட பேகம், ஒன்றுந் தோன்ருதவளாய் இங்கு மங்கும் பார்த்துப் பிறகு பானுபா யிருக்கும் அந்தப்புரம் ஓடினள். அங்கே பானுபாய் மஞ்சத்தின் மீது படுத்து வாசித்துக்கொண் டிருந்தாள். அவளைத் தம் கையாற் பிடித்துத் தூக்கி இறுகத் தழுவி, துக்கத்தால் நெஞ்சடைத்துச் "சகோதரி! என் நாயகரைக் காப்பாற்று" என்ருள்.

இயற்கையாகவே பெருந்தகையின ளாகிய பானுபாய், நவாப் அவர்கள் தனக்கும், தன்னைப் பெற்ருேர்களுக்கும், சுற்றத்தார்களுக் கும், மற்றக் குடிகளுக்கும் செய்த அக்கிரமச் செயல்களை எல்லாம் அறவே மறந்தவளாய் "அம்மா! வாருங்கள்" என்ருள்.

பிறகு, நவாபின் வேண்டுகோளாலும், அவரையும் அவர் மனை வியையும் சிரோமணியார் மாணுக்கரின் உதவியால் ஹூக்லி (Hughly) சுபேதாரிடம் சேர்த்து, அவர்களுக்கு எவ்வித துன்ப மும் நேரிடா வண்ணம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லினள்.

பின்னர், இராஜ மஹாலி லிருந்த குடிக ளெல்லோரும் மொக லாயர் சேனைவருவதைக் கண்டு பயந்து, நகரைவிட்டு ஓடிக்கொண் டிருந்தனர். அச் செய்தி பானுபாய் காதுக் கெட்டியும் "நீங்கள் பயப்பட வேண்டாம். நான் அரண்மனையி லிருக்கின்றேன். என் நாயகர் வருகின்ருர். நீங்க ளெல்லோரும் என்னுடைய மக்களே. நீங்கள் பயமின்றி இங்கேயே இருங்கள்" என்று தூதர்களை அனுப்பி ஜனங்களுக்குத் தெரிவித்தாள்.

அன்றைய இரவே மொகலாயர் இராஜ மஹாலில் பிரவே சித்தனர். அநந்தராயும் பானுபாயைச் சந்தித்தான்.

பதினெரு வயதுள்ள இளம் பெண்ணு யிருந்தபோது பிரிந்த அநந்தன், பதினேழாம் வயதுள்ள அவளது அழகின் மிகுதியைக் கண்டு களிப்பெனுங் கடலுள் மூழ்கினன்.

இராஜா அநந்தராய் உலக நீதிப்படி பானுபாயை விவாக முடித்து, வங்காளத்தில் முதல் சுபேதாராக ஆட்சி புரிந்தார். அவ் விஷயம் சரித்திர மூலமாய் எல்லோரும் அறிந்திருப்பதால் இன் னும் அதிகமாகச் சொல்லவேண்டிய தில்லை.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பத்திராதிபர் அபிப்பிராயம்

இஃதோர் சரித்திர சம்பந்தமான சிறு கதை. ஆண் பெண் இருபாலார்க்கும் பயன்படுமாறு எளிய நடையில் எழுதப் பெற்றது. மகமதியர் அரசாட்சியில் இந்தியாவின் நிலைமையும், படானியர் செய்துவந்த கொடுமைகளும் இதன் கண் விரிவாய் எழுதப்பட்டுளன. கல்வியிலும் நாகரீகத்திலுஞ் சிறந்து விளங்கிய நம் இந்திய நாடு அன்னியராற் கைப்பற்றப்பட்டுச் சீர் குலைந்ததற்குக் காரணம், நம் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த பழக்க வழக்கங்களை நாம் நிராகரித்து வருவதே என்பது இதிற் சொல்லப்படுகிறது.

கதா நாயகனாகிய அநந்தராய் ஆரம்பத்தில் தன் நாட்டினரை ஒன்று சேர்க்க எவ்வளவு முயன்றும் பயன்படாது முடிவில் மொகலாய சக்கரவர்த்தியார் அக்ப ரவர்களுடைய உதவியைக் கொண்டு, தன் குடும்பத்தை அழித்த நவாப்பை யுத்தத்தில் தோற்கடித்தது அவனது விடா முயற்சியையும் பேராற்றலையும் விளக்குகிறது. கதா நாயகியாகிய பானுபாயோ தோற்றத்தில் பெண்பாலாயினும் ஆற்றலில் ஆண் மக்களுக்கு ஒப்பே யாவள். நவாபின் கூட்டத்தை நொடிப் போதில் அழிக்கக் கூடிய வல்லமை தன்னிட மிருந்தும், ஜனங்களின் நன்மையின் பொருட்டு நன்றி செய்ததும் நவாப்பின் பேகம் ஆவதற்குச் சூழ்ச்சிசெய்ததும் அவளது சீவகாருண்ணியத்தை காட்டுகிறது. நவாப்பினால் அனுப்பப்பட்ட கீர்த்திநாதராய், பானுபாயைக்கண்டு பேசியபோது, அவள் அவருக்குச் சாதுரியமாக விடை அளித்தது, அவளது புத்தி வன்மையையுங் கற்பின் திறத்தையுங் காட்டுகின்றது. தன் கணவர் தன்னைக் கைவிடா ரென்ற நம்பிக்கை அவளுக்கு முற்றிலுமிருந்த தென்பது, ஓராண்டு வரைத் தன்னைத் தீண்டாதவாறு அவள் நவாப்புக்கு இட்ட நிபந்தனையால் விளங்குகிறது. நவாப்பும் அவரது மனைவியும் இவளது கையிற் சிக்கியும், அவர்கள்மீது தன் பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளாது, அவர்கள் ஆபத்தினின்றுந் தப்பிப் பிழைப்பதற்கு வழி தேடியது, பானுபாயின் பெருந்தகைமையை வெளிப்படுத்துகிறது.

கற்றறிந்தோர் எம் மதத்தின ராயினும், அவர்களால் நன்கு மதிக்கப்படுவ ரென்பது நமது சிரோமணிப் பண்டிதர் மாட்டு வெளியாகிறது.

இதனை இயற்றிய ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை யவர்கள் நம் நாட்டின் சீர் கேட்டிற்கு நாமே காரணமென்று காட்டுவதுடன் "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்னும் நீதியின் உண்மையையும் இச் சிறு கதையின் மூலம் விளக்கி யுள்ளார்.

இவ்வாசிரியர் இது போன்ற இன்னும் பல நூல்களை வெளியிட்டு நம் நாட்டினர்க்குப் பேருதவி செய்வா ரென்று நம்புகிறேம்.

இந்தக் கதையை கூடிய விரைவில் புத்தக ரூபாய் வெளிப்படுத்த வேண்டுமென்று இதனை இயற்றிய ஆசிரியர் நோக்கங் கொண்டிருக்கிறார். கூடிய விரைவில் வெளி வரலாம்.

நாடகம்

நாடகம் நெடுங்காலத்துக்கு முன்னரே செந்தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து செழுமை யுற்றிருந்தது. இன்பத்திலே திளைத்த மக்கள் இன்றுங் குதித்துக் கூத்தாடுதலைக் காண்கின்றேம். அன்றியும் ஒருவர் தமது கருத்தைக் கவர்ந்த நிகழ்ச்சியைப் பிறருக்குப் புலப்படுத்த வேண்டும்பொழு தெல்லாம் சில அடையாளங்களால் உணர்த்துதலும் ஒருவர் செய்ததுபோலவே நடித்துக் காட்டுதலும் உலக இயற்கையில் காணப்படுவதாம். அவ் வியற்கைக் குணமே நாடகத்துக்கு எல்லா நாட்டிலும் அடிப்படை என்று கூறலாம். முதல் முதல் கூத்துத் தோன்றியது. அதன்பின் கூத்துள்ளே சில பாடல்களும் கலந்தன. அதன் பின்பே கதை தழுவிய நாடகம் வளர்வ தாயிற்று. பண்டைக் காலத்துச் சான்றோர் தமிழ் இயல், இசை, நாடகம் என முப்பகுதியை உடைத்து என்று கூறி வருவதனால் நாடகத்தை அவர்கள் போற்றி வளர்த்தார்கள் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று.

நாடகம் வேத்தியல் என்றும் பொதுவியல் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வேத்தியல் என்பது அரண்மனையிலே அரசரையும் அவர்தம் காதன் மகளிரையும் மகிழ்விக்கும் பொருட்டு நடிக்கப்பட்டு வந்த நாடகங்க ளாகும். பொதுவியல் என்பது பொதுவாக யாவருக்கும் நடித்துக் காட்டப்படும் நாடகங்களாம். சங்க காலத்திலேயே நாடகத் தமிழ் பல துறைகளை உடையதாய்ச் சிறந்து திகழ்ந்தது.

பிற்காலத்திலே சமண சமயம் தலையெடுத்து உலக இன்பங்களை உவர்த்து நிற்றலே மெய்யுணர்ச்சிக்கு முதலாவது படி என்று உணர்த்திவந்த காலத்து அதன் பயனாக மக்கள் இசை நாடகம் காமச்சுவையை ஊட்டுவனவாம் என்றெண்ணி அவற்றின் தலைகளை உடைத்தெறிந்தனர். இருப்பினும் நாடகம் ஏதோ ஒரு வகையிலே

தலைகாட்டிக்கொண்டு வாராநின்றது. நாடகம் எக்காலத்துக்கும் எவருக்கும் இன்ப மகிழ்ச்சியை ஊட்டுவதாகும். பொதுமக்கட்கு அறிவைப் புகட்டும் தன்மையில் நாடகத்துக்கு ஒப்பானது வேறொன்றுமில்லை. நாடகத் தமிழிலே இயல், இசை என்னும் இரண்டு தமிழும் சேர்ந்துள்ளன. எனவே நாடகத்தமிழே ஏனை இரண்டு தமிழிலும் சிறந்தது என்பது தானே போதரும். வடநூலார் நாடகத்தையே தங்கள் நூல்களிலே முதற்றரமானவை எனக் கொள்கின்றனர். அவர்களால் முதலாக வைத்தெண்ணப்படும் காளிதாச மஹா கவியும் நாடகப் புலவரே. அவ்வாறே ஆங்கிலப் புலவர்களுள் தலைசிறந்து விளங்குபவர் ஷேக்ஸ்பியர் என்னும் நாடகக் கவிஞரே. தமிழிலேயும் கோவைப் பிரபந்தம் நாடகத் தமிழ் என்றே கூறப்படும். அதுவே தமிழ்ப் பிரபந்த வகைகளுற் சிறந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அன்றியும் ஒரு சிறந்த புலவர் தம்முடைய முழு ஆற்றலையும் வெளிப்படுத்தல் வேண்டுமாயின் நாடகத்தைக் காட்டினும் சிறந்த வாயில் இல்லை. பல திறப்பட்ட பாத்திரங்களும் நாடகத்திலே நடிக்கப் பெறுதலான் நாடகம் ஓர் உலகம் போல இலங்குகின்றது. எல்லாம் வல்ல இறைவன் நடத்தும் படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களும் நாடகமென்றே உண்மை நூல்கள் உரைக்கின்றன.

ஆனல், நாடகம் எழுதுவதும் யாவருக்கும் இயலுவதன்று; அதனை நடித்துக் காட்டுவதும் எளிதன்று. அதற்கு வேண்டும் உப கரணங்கள் செவ்வையாகப் பொருந்தி யிருத்தல் வேண்டும். இப்பொழுது நாடகம் ஆடுபவர்களுள் வயிற்றுப் பிழைப்புக்காக ஆடுவோர்களும் மகிழ்ச்சிக்காக ஆடுபவர்களுமென இரு திறத்தார் உளர். இவருள் முன்னையோர் சிறிது காலத்துக்கு முன் நடிக்கப்பட்டு வந்த சுமாரான நிலையினையும் விட்டு, மிகத் தாழ்ந்த நிலையினை அடைந்து விட்டனர். அவர்களுக்கெல்லாம் பாட்டே பிரதானம். நடிப்புக் கடைசி விஷயம். நாடகத்துக்கு நடிப்புத் தான் உயிர் என்று தெரியவில்லை. பாட்டுக்குச் சங்கீத கச்சேரிகள் வைத்துக் கேட்க வேண்டுமே அல்லது நாடகத்தில் போய்ச் சங்கீதத்தையே விரும்புவது நாடகக் கொலையாகும். வேண்டிய சில இடங்களில் கொஞ்சம் பாட்டிருக்கலாம். அப்பொழுதும் நடிப்பைத் தான் முதலாகக் கொள்ள வேண்டும். சாதாரணமாகச் சிறிது பாடத் தெரிந்த ஒருவருக்கு மாதம் ஆயிரம் முதல் மூவாயிரம் வரையில் சம்பளம் தந்து ஒருவர் இருவரைக் கொண்டே இக்காலத்து நாடகக் கூட்டத்தார் நாடகம் நடிக்கின்றனர். அவர்கட்கு ஓர் ஒழுங்கும் இல்லை. அவர்களுக்கு மேல் இரண்டொருவரைச் சேர்த்துக் கொள்ள அவர்களுக்கு இயலாது. எவ்வளவு பொருள் வந்தாலும்

அதனை இரண்டு நடிகர்களே கவளீகரித்து விடுகிறார்கள். பெரும் பகுதியான பணம் விளம்பரத்துக்குச் செலவழிகிறது. இந்நிலையில் நாடகம் சீரடைவது எங்ஙனம்? அது சீரழிந்து நாளடைவில் இறந்துபடும் என்பதே திண்ணம்.

இவர்கட்கு நடிப்புத்தான் நாடகம் என்ற உணர்ச்சி உதிக்கு மானால் சிறந்த நடிகர்களைக் கொண்டு நாடகத்தைச் செவ்வையாக நடிப்பிக்கலாம். அன்றியும் சிறு பிள்ளைகளைக் கொண்டு நாடகம் நடத்துகிற ஒரு தீய வழக்கம் சிறிது காலமாகத் தோன்றி நாட்டிலே சிறுவர்கள் ஒழுக்கத்தைக் கெடுத்து வருகின்றது. இள வயதுள்ள பிள்ளைகள் பெரியவர்களாக வேடம் பூண்டு நடிப்பது எத்துணை அருவருப்பை விளைவிக்கின்றது? அத்தகைய கொடுஞ் செயல்களை மக்கள் கண்டித்து ஒழிக்கவேண்டும். அதைப்பற்றி அரசாங்கத்தார் ஒரு சட்டம் பிறப்பிப்பதும் நலமாகும்.

இனி, நாடகத்துக்காகக் கொள்ளப்படும் கதைகளைப் பற்றியோ சொல்லவேண்டுவதே இல்லை. திருப்பித் திருப்பிக் கோவலன் கதை, பவளக்கொடி, அல்லி, அரிச்சந்திரன் கதை முதலான ஒரு சிலவற்றைத் தவிர்த்து வேறொன்றையும் இவர்கள் நடிப்பதில்லை. இவைகளையும் நூற்கருத்துக் கிணங்க அழகாக நடித்துக் காட்டுவதில்லை. உதாரணமாகக் கோவலன் கதை சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காப்பியத்திலே நன்கு சொல்லப்பட்டுளது. அக் கதை இப்பொழுது மிக எளிதாகவும் அறிஞர்களால் எழுதப்பட்டு வெளி வந்துள்ளது. இத்துணை எளிதாக இருந்தும் இதனைக் காணாத நாடகக் கூட்டத்தார் அக் கதையின் அழகை முற்றும் சிதைத்து, அலங்கோலமாகக் கற்றோர் குமட்டும்படி ஆபாசமாக நடித்துக் காட்டுகின்றனர். சிலப்பதிகாரமே அங்கே இல்லை. இவர்கள் புன்மதி அதிகாரமே அறிஞர்கட்கு அதிகாரத்தை உண்டுபண்ணு கின்றது. இதுவரையில் இதனையேனும் ஒழுங்காக நடித்துக்காட்ட முன் வந்தோர் எவரும் இலர். இவர்கள் பெயரைக் கூட எழுதத் தெரியாமல் கோவலன் என்பதைக் கோவிலன் என்றும் கண்ணகி என்பதைக் கர்ணகி என்றும் மாதவி என்பதை மாதகி என்றும் எழுதுவர்.

நாடக சபைகள் சில ஏற்பட்டு நாடகத்தைச் சீர்திருத்தம் செய்வதாகக் கூறின. அவைகள் அங்ஙனம் செய்தனவா என்று நோக்கினால் அங்ஙனம் செய்ததாகத் தோன்றவில்லை. 'சுகுண விலாச சபை' ஒன்றுமட்டும் ஏதோ ஓரளவு உழைத்து வருகின்றது எனக் கூறலாம். பிறவெல்லாம் மிகத் தாழ்ந்த நிலையிலேயே கிடக்கின்றன. இவர்கள் நடிக்கும் நாடகம் நாடகக் கூட்டத்தாரைக் காட்டினும் இழிந்ததாக உள்ளது. இவர்களில் பெரும்பான்மையோர் சமய சம்பந்தமான நாடகங்களை நடிக்க முயல்கின்

றனர். அது தவறு. சமய சம்பந்தம் ஒன்றுமட்டும் நாடகத்துக்குப் போதாது. நாடக வுறுப்புக்கள் அனைத்தும் பொருந்திய ஒரு கதையே நாடகத்துக்குப் பொருந்துவது ; மற்றவை பயனுடையன வல்ல.

சில பள்ளிக்கூடங்களிலே சிறுவர்களைக் கொண்டு நாடகம் நடத்துகின்றனர். இவர்களும் சிறுவர் வயதுக்கு இசைவான கதைகளை எடுத்துக் கொள்ளாமல் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நடிப்பிக்கின்றனர். இதனால் சிறுவர்கள் பிஞ்சிலே பழுத்து விடுகின்றனர். பெண் பாடசாலைகளில் இவ் வழக்கம் நடந்து வருகிறது. அது நல்ல நெறியிலே நடைபெறா விட்டால் மிக்க தீமையை விளைவிக்கும். ஒரு பெண் பாடசாலையில் கோபிகா வஸ்திராபஹரணம் என்னும் நாடகம் ஓர் ஆண்மகனால் நடித்துவிக்கப்பட்டது! இதுபோலும் கொடுமை வேறொன்று மில்லை.

ஆண் பெண்வேடம் பூணுதலும், பெண் ஆண்வேடம் புனைதலும்கூட இயற்கைக்கு விரோதமே. ஆனால் நமது நாட்டிலே இத்தகைய சீர் திருத்தம் உண்டாக இன்னொரு நூற்றாண்டு செல்லும். நமது தமிழ் நாடக சபைகளைவிட எத்தனையோ மடங்கு தெலுங்கு, கன்னடம் முதலிய நாடக சபைகள் சிறந்து விளங்குகின்றன. மற்ற மொழியினர் முயற்சி பாராட்டத் தக்கதாக உளது. நமது மொழியினரோ உறக்கம் பிடித்தவர்களாய் ஒன்றிலும் ஊக்கம் இன்றி, உண்டுடுத் துறங்கி ஒழிகின்றனர். அந்தோ! இது தமிழ் செய்த தவக் குறைவோ! சாபக்கட்டோ! தெரியவில்லை.

இனி, நாடகத் தமிழை வளப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்துச் சிறிது கூறி முடிப்போம். நமது தமிழ் நாட்டிலே உள்ள செல்வர் பலர் உதவியைப் பெற்று நாடகசபைகள் பல ஒழுங்கான வகையில் நடைபெறல் வேண்டும். அங்கே இயற்றமிழ்ப் புலவர்கள் இசைத் தமிழ்ப் புலவர்கள் நாடகப் புலவர்கள் யாவரும் ஒருங்கு கூடித் தகுந்த கதைகளைச் செவ்வையான நடிகர்களைக் கொண்டு நடிப்பிக்க வேண்டும். அஃது அப்புறம் செய்யப்படுவ தாகும். இப்பொழுது நடித்து வருவோர் சில வழிகளில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்களானால் மெது மெதுவாக நாடகம் வளர்ச்சி யுறலாம்.

முதலாவது நாடகத்துக்கு நடிப்பே உயிர் என்பதை ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் பதித்தல் வேண்டும்.

இரண்டாவது சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மூன்றாவது வசனத்தை முதன்மையாகவும் பாட்டை இரண்டாம் பக்ஷமாகவும் கொள்ளவேண்டும்.

நான்காவது கதையின் கருத்துக்கு ஏற்றவாறு பாத்திரங்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும். உருவம் உயரம் முதலியவற்றைக் கவனிக்கவேண்டும்.

ஐந்தாவது சரித்திர உண்மையோடு சம்பாஷணை, உடை, நிலை முதலாயின பொருந்தியிருத்தல் வேண்டும்.

ஆறாவது திரைகள், உடைகள் முதலியன இயற்கை நெறிக்கு முரணாது இருத்தல் வேண்டும்.

இத்தகைய உண்மைகளைக் கடைப்பிடித்து நாடக சபையார் நடித்து வருவார்களானால் மென்மேல உண்மை வழியில் நாடகம் வளர்ச்சியுற்று உலகத்துக்குப் பேருண்மைகளை எளிதில் புகட்டுவதோடு அனைவருக்கும் இன்பத்தையும் விளைவிக்கும். கல்லூரிகளிலே வீரம், ஹாஸ்யம் கருணை முதலிய இரசங்கள் மிகுந்த நாடகங்களை நடித்துக் காட்டுதல் மேலானது. நாடகம் எவ்வகையிலும் புறக்கணித்து ஒதுக்கற் பாலதன்று. ஆதலின் அதனை நாம் பொழுது போக்காக மட்டுமன்று; அறிவு வளர்ச்சி இன்ப மகிழ்ச்சியாகிய எல்லாவற்றிற்கும் கொள்ளலா மாதலின் அதனை எவ்வகையினும் முயன்று முன்னுக்குக் கொண்டுவர முயல்வோமாக.

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

இலக்கிய பஞ்சகம்.

திருவனந்தபுரம், S. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாடியது.

வள்ளுவர் தந்த திருமறையைத் தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே என்றும்
உத்தமராகி யொழுகுவமே. (1)

பாவின் சுவைக் கட லுண்டெழுந்து கம்பன்
பாரிற்பொழிந்த தீம்பாற் கடலை
நாவி னினிக்கப் பருகுவமே - நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவமே. (2)

தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதிகார மதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. (3)

கற்றவர் மெச்சும் கலித்தொகை இன்பக்
கற்பனை சேரும் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே - காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே. (4)

பண்டை இயற்கை வளங்களெல்லாம் பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழு மருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே. (5)

கைத்தொழில்.

(சிந்துபூந்துறை, நா. இலக்ஷ்மணப்பெருமாள் எழுதியது.)

சென்ற சில வருடங்களாக நம் நாட்டிற் பஞ்ச மென்று குடிகள் சட்டி தூக்கி நாடு விட்டு ஓடா விடினும், லக்ஷக்கணக்காய்ப் பட்டினி கிடந்து, ரஸ்தாப்புறங்களிலும் கஞ்சித் தொட்டிகளிலும் பிணக் காடாகக் கிடக்காவிடினும், பஞ்சம் குடிகொண்டு வருகின்ற தென்றே கூறலாம். தாது வருடப் பஞ்சத்திலும் அரிசி 4, 4½ படி விற்றது சொற்ப நாட்களே. அவ்வாறிருக்க ஒரே மாதிரி யாய் ஐந்து, ஆறு ஆண்டுகளாக நம் நாட்டில் அரிசி விலையும் தானிய விலையும் குறைந்து விற்றுக் குடிகளின் உயிரைச் சொற் பம் சொற்பமாக வாங்கி வருவதை எந்தப் புத்திமானும் அநுபவத் தில் அறிவான். இம்மாதிரியாகவே இருந்துவரின் நாம் க்ஷேம மடைவது எக்காலம்? வருணபகவானது வள்ளல் தன்மை வற்றும லிருந்தும் இத்துன்பத்தை நாம் அநுபவிப்பதா யிருந்தால் என் றைக்கு முன்னுக்கு வருவது? இக்கேடு தொலைய வழிதா னென்ன? அல்லது நமக்கு மீட்சி கிடையாதோ? ஏற்கனவே பிளேக், காலரா முதலிய தொத்து வியாதிகள் நம் நாட்டைப் பெரிதும் வருத்துகின்றன. இத்தருணத்தில் பாழும் பஞ்சமும் பலமாய்ப் பற்றியதானல் பாரத நாடு பாழடைவது நிச்சயம். நம் நாட்டிற்குப் பஞ்சம் வரக் காரண மென்ன? அவைகளைப்பற்றிச் சிந்தித்து வேண்டிய முயற்சிசெய்து சீர்திருத்தினாலல்லது நாம் க்ஷேம மடையப் போவதில்லை.

நம் நாட்டிலே நம் முன்னோர்கள் பெரு முயற்சியாலே அள விறந்த பொருள்களைத் தேடி பல தருமங்களையும், உலகிற்கு

வேண்டிய பெருங் காரியங்களையும் செய்து தாங்களும் சுகமடைந் திருந்தார்க ளென்பது பல பழந் தமிழ் நூல்களால் தெரிய வரு கிறது. இதுவு மன்றிக் கோபுரங்கள், ஆலயங்கள், மகாரதங்கள், சத்திரங்கள் முதலியவற்றை நாம் இன்னும் காண்கிரும்.

இவ்வாருகச் செலவிட்ட பொருளினை நாம் அடைதற்குத் தக்க காரணமாயுள்ளது நமது நன் முயற்சியே யாம்.

இத்தகைய முயற்சியாலே தாவர சங்கமமாகிய எல்லா உயிர்களும் சீவிக்கின்றன. நீரினுக்கு மேனேக்கிச் செல்லும் சக்தி யில்லை. மரம், புல் முதலியன தம் மடியில் உறைந்த நீரினை மேலே இழுத்துக்கொள்கின்றன.

இங்ஙன மெல்லா உயிர்களும் முயற்சியுடையனவா யிருக்க நம்மவரில் சிலர் ஒரு முயற்சியும் இன்றி உண்பதும் உறங்குவது மாகக் காலங் கழிக்கின்றனர். அவர்களை மரம் முதலியவற்ருேடாயி னும் ஒப்பிட்டுக் கூற முடியாது. அவர்களைப் பிணத்தோடொப் பிட்டுக் கூறி யிருக்கின்றனர் அறிஞர்.

இனி மேற் கூறிய பொருளை அடைவதற்குச் செய்யும் முயற்சி யாகிற தொழில்கள் பொதுவாய் ஆறு வகையன வென்று பெரி யோர்கள் நூல்களில் கூறி யிருக்கின்றனர். அவை "வரைவொடு தொழிலே வித்தை வாணிக முழவே சிற்பம்" என்பனவாம்.

மேற் கூறிய அறுவகைத் தொழிலிலே வரைவாவது:— எழுதுதல், தொழிலாவது:-கைத்தொழில், வித்தையாவது:-கல்வி, வாணிகமாவது:-வியாபாரம், உழவாவது:-பயிர் செய்தல், சிற்பமா வது:-சித்திரத் தொழில், அது 'கல்லுலோகம் மண் செங்கல் கண்ட சர்க்கரை மெழுகு, சொல்லிய மரமே தந்தஞ் சுதை வண்ணஞ் செஞ்சிற்பர்க்காம்' எனக் கூறியபடி பத்து வகை உறுப்பு களால் செய்யப்படும்.

மேற் கூறிய அறுவகைத் தொழிலில் ஈண்டு நாம் கூறப் புகுந்தது கைத்தொழில் என்பதைப் பற்றியே யாம்.

கைத்தொழில் என்ருல் கையால் செய்யப்படும் கருமம் என் றருத்தம். தச்சன், கொல்லன், தட்டான் முதலிய தொழிலாளி கள் தங்கள் கருமங்களை கையாற் செய்கின்றனர். சரீரத்திலுள்ள மற்ற உருப்புகளும் தொழில் செய்யும் விஷயத்தில் உபயோகப் பட்டாலும் கைகளே அதிகமாய் உபயோகப்படுவதால் சரீர முயற்சியால் செய்யப்படும் சகல வேலைகளும் கைத்தொழி லென்றே சொல்லப்படுகின்றன. இவ்விதக் கைத்தொழில் தற் காலம் குறைந்து வருவதால் நமக்குத் தேவையான வஸ்துக்களை நாம் சீமையிலிருந்து வரவழைக்கிருேம்.

உலகில் முன்னேற்றமடைந்து செல்வமும் பலமும் பொருந்தியுள்ள தேசங்களனைத்தும் கைத்தொழில் விருத்தி செய்வதிலேயே பிரிய முடையவைகளாக இருக்கக் காணலாம். திருஷ்டாந்தமாக இங்கிலாந்தி லுள்ளோர், பெரிய பிரபுக்களாய் இருப்பவர்கள் கூட, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் இவற்றையே மதிப்பார்கள். நம் நாட்டாரோ கைத்தொழிலுக்குப் பதிலாக 'அடிமைத் தொழிலை மதிக்கிறார்கள்.' கொக்குக்கு ஒன்றே மதி யென்பது போல் நம்மவர்கள் இங்கிலீஷ் கல்வி ஒன்றையே பெரிதாக எண்ணிக் கைத்தொழில்களை மறந்துவிடுவதால் தேக பல னற்று, தரித்திரமுற்று அவதி யடைகின்றனர்.

எல்லோரும் ஒரே காரியத்தைச் செய்யத்தொடங்குவதைப் போன்ற மூடத்தனம் வேறொன் றில்லை. மிருகங்களைக் கவனிப்போம். ஆடு, மாடு, யானை, குதிரை முதலியன சாக பக்ஷணிகள். புலி, கரடி முதலியவை மாமிஸ பக்ஷணிகள். எல்லா மிருகங்களும் சாக பக்ஷணி யாயின் மனிதன் வாயுவைத் தான் உட்கொள்ளவேண்டும்.

எல்லா மிருகங்களும் மாமிஸ பக்ஷணியாயின் மிருக மென்னும் சப்தமே ஒழிந்துபோம். ஆதலின் பரம ஞானியான பரமாத்மா உலகத்தில் பலவித வித்தியாசங்களை ஏற்படுத்தி யிருக்கிறார். எல்லோரும் ஒரே கட்டுப்பாடாகக் கத்திரிக்காயைத் தவிர வேறு காய்களைப் புசிப்பதில்லை என்று தீர்மானித்தால், கத்திரிக்காய் ஒன்று ஒரு ரூபாயாகும். மற்றக் காய்கள் விலை யாகா. அத்தன்மையே போல் எல்லோரும் இங்கிலீஷ் படிப்பதால் மற்றத் தொழில்கள் குறைந்து போகின்றன. முன்னாளில் பி.ஏ. (B.A.) பரீக்ஷை தேறினால் கலெக்டராபீஸில் உத்யோகம் கிடைக்கும். நாலைந்து வருடங்களில் சப் மாஜிஸ்டிராயும் தாசில்தாராயும் ஆய்விடலாம். தற்காலத்திலோ ஒரு அட்டெண்டர் வேலையாவது, மொச்சி வேலையாவது காலியானால் அதற்கு ஆயிரம் பீ.ஏ. க்கள் விண்ணப்பம் செய்கிறார்கள். 12 ரூபாய் சம்பளம் கிடைத்தவுடன் டிப்டி கலெக்டர் வேலை கிடைத்தது போல் சந்தோஷப்படுகின்றனர். நாலைந்து வருஷம் சென்றால் 15 ரூபாய் சம்பளமுள்ள ஒரு தாலுகாக் குமாஸ்தா வேலை கிடைக்கும். இதி லிருக்கும் பொழுது இவர்கள் பயின்ற கணித சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலிய நூல்கள் மறந்து விடுகின்றன. பிறகு அந்திய காலத்தில் 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய் பிரமோஷன் செய்திருப்பதாக உத்திரவு வருகிறது. உடனே எமனிட மிருந்து வாரண்டும் வந்து விடுகிறது!

ஒரு மனிதன் பீ.ஏ, வரைக்கும் படிப்பதானால் குறைந்த பக்ஷம் இரண்டாயிரம் ரூபாய் செலவாகும். இந்த ரூபாயை வட்டிக்குப் போட்டாலும் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் கிடைக்கும். இத்

துடன் கைத்தொழிலும் கற்றுக் கொண்டால் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் வரும்படி அடையலாம். இச் சம்பளம் பிறருடைய சிபார்ஸி யின்றி கிடைக்கக் கூடியது. பெருமைக்கும் குறைவில்லை, சுகமாய் வாழலாம். இதனால் எல்லோரும் படிப்பைத் தவிர்த்துக் கைத் தொழிலைக் கொள்ளட்டு மென்பது என் கருத்தன்று. தன வானாயினும் ஏழையாயினும் மகா புத்திமானா யிருப்பவன் கல்வி யொன்றையே கற்கலாம். மற்றவர்கள் கல்வியுடன் கைத் தொழிலை யும் பிரதானமாய்க் கற்கவேண்டும்.

இரவெல்லாம் கண் விழித்துப் படித்துப் பொருளையும் செல வழித்துப் பரீக்ஷைக்குப் பணம்கட்டி அத்துடன் வயிற்றில் கல்நெருப் பையும் கட்டிக்கொண்டு பரீக்ஷை தேறுமோ தேறாதோ என்று சந் தேகித்துக் குறிகாரனுக்கும் ஜோஸியனுக்கும் ஓயாத வேலையைக் கொடுத்து மனோ விசாரத்தால் தேக மிளைத்து மனம் சலித்துத் தைரியம் குன்றி நல்ல ரத்த மின்றி உற்சாகம் நீங்கி உன்மத்தம் ஓங்கித் துன்பப்படுவது விவேகமா? உடனே பலனைத் தரக்கூடிய தும் ஒருவர் தயவை வேண்டாததும் விசார மற்றதுமான கைத் தொலைக் கற்பது விவேகமா? எழுதப் படிக்கவும் கணக்கு வழக்கு கள் தெரியவும் வேண்டிய அளவு கல்வி பயின்று பின் கைத் தொழிலைப் பயில்வதே நம்மவர்க்கு லக்ஷண மாகும்.

நமது நாட்டில் பல விதக் கைத் தொழிலும் அழிந்த தினால், நூற்றறுபத்திரண்டரை லட்சம் பவுன் மதிப்புள்ள பருத்தி யும், எண்பத்தெட்டு லட்சம் பவுன் மதிப்புள்ள சணல் நாரும், முப்பத்தெட்டு லட்சத்துத் தொண்ணூறாயிரம் பவுன் விலை பெறு மான முரட்டுத் தோலும், தொண்ணூற்றறுபது லட்சம் பவுன் விலை பெறுமான எண்ணெய் விதைகளும், நமது நாட்டிலிருந்து அந்நிய தேசத்திற்குப் போகின்றன. இவைகள் வெளி யேறாமல் நமது நாட்டில் இயந்திரங்களை ஸ்தாபித்துத் தொழில் செய்வோரை வேலை பார்க்கச் செய்து பலவிதச் செயற்கைப் பொருள்களை உண் டாக்குவோ மானால் நமது தேசத்தில் கணக்கில்லாத செல்வப் பொருளுண்டாகு மென்பதற்குச் சந்தேக மில்லை.

அந்நிய தேசத்திலிருந்து நமது நாட்டில் வந்திறங்கும் பொருள்கள் எழுபத்தைந்து லட்சம் பவுன் மதிப்புள்ள பஞ்சுத் தினுசுகளும், மூன்று லட்சம் பவுன் மதிப்புள்ள தோற் சாமான்க ளும் இருபத்திரண்டரை லட்சம் பவுன் மதிப்புள்ள மண் ணெண்ணெயும், நாற்பது லட்சம் பவுன் மதிப்புள்ள வெள்ளைச் சர்க்கரையும், நாலு லட்சம் பவுன் மதிப்புள்ள லிவர்ப்பூல் உப்பு மாம் (Liverpool salt.) இவைகளின்றி இன்னும் காகிதம், சோப், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, குடைகள், மருந்துகள்

முதலிய பல வித வஸ்துக்களும் வெளித் தேசங்களி னின்று வந்திறங்குகின்றன.

சீமையில் பல விதமான யந்திர சாலைகளும் கைத்தொழிற் சாலைகளு மிருக்கின்றன. அவைகளில் அனேக விதமான இயந் திரங்களும் விசித்திரமான கருவிகளு மிருக்கின்ற தாகையால் வேலைகள் வெகு சுலபமாய் நடந்தேறுகின்றன. அவ்வித தொழிற் சாலைகளும் கருவிகளும் நமது நாட்டில் பல விடங்களில் நாம் ஏற்படுத்திக்கொண்டால் அனேக சாமான்களை நாமே செய்து கொள்ளலாம். உதாரணமாகக் காகிதங்களை எடுத்துக்கொள்வோம். சீமையில் செய்யப்படும் காகிதங்களைப்போல் தற்காலம் நமது நாட்டில் கல்கத்தாவில் இயந்திரசாலைகளேற்படுத்திப் பலவித காகி தங்கள் செய்கின்றனர். அவ்வாறு செய்யப்படும் காகிதங்கள் கெட்டியாயும் அழுத்தமாயு மிருக்கின்றன. விலையும் சுலபம். காகித யந்திரங்களைப்போலவே, துணி, நெருப்புக்குச்சி, பீங்கான் தட்டுகள், ஸ்டீல் பேனுக்கள் முதலிய உபயோகமான சாமான் களைச் செய்வதற்கான யந்திரங்களை நமது நாட்டில் எங்கும் ஏற் படுத்தினல் மிகவும் சௌகரியமா யிருக்கும். இதற்காக நம் நாட்டு மகா ராஜாக்களும், பிரபுக்களும், ஜமீன்தார்களும் ஒன்று கூடிப் பிரதான நகரங்களில் யந்திரசாலைகளை ஸ்தாபிக்கவேண்டும்.

நம் நாட்டார் அந்நிய நாட்டிலே பல விதக் கைத்தொழில் களிலே தேர்ச்சி பெற்றவர்களை வரவழைத்தாயினும், அல்லது நமது தேசத்திலுள்ள புத்திமான்களை அந்நிய தேசங்களுக்கு அனுப்பி யாயினும், பல விதக் கைத்தொழில் படிப்பை விருத்தி செய்து நமது தேயத்திலே பரவச் செய்யாவிட்டால் நாட்டில் வறு மையாலே மிகுந்த கேடு சம்பவிக்கு மென்று தோன்றுகின்றது.

நமது அறியாமையாலும் வீண் மயக்கத்தாலும், நம் முன் னோர் நாகரீகம் ஆசாரம் முதலியவற்றை இழிவு செய்ததாலும், அன்னிய நாகரீக ஆசாரங்களில் தகாதனவற்றை யெல்லாம் அநு சரிக்கத் தொடங்கியதாலுமே, நாம் இத்தகைய நிலைமைக்கு வந்து விட்டோம். இது நம் குற்றமேயன்றி வேறில்லை. இனியேனும் நம் மக்களுக்குக் கைத்தொழில் கல்வியை புகட்டி, அடிமைத் தொழி லில் இப்பொழுதிருக்கும் ஆசையை ஒழித்து, அவர்களுக்குச் சுயா தீனத் தொழில்களின் பெருமையையும் நன்மையையும் நன்கு விளங்கச்செய்தால் தான் நம் நாடு க்ஷேம மடையும். பெற்றோர் களும் உபாத்திமார்களும் பெரியோர்களும் இவ்விஷயத்தைக் கவனித்து நடப்பார்க ளாக. எல்லாம் வல்ல பரம்பொருள் பாரத நாட்டிற்கு நல்லருள் புரியவேண்டுமென்று பிரார்த்திப்போ மாக.

சந்தா ஆர்டர் பாரம்

Date,....................192 .

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

மதராஸ்.

ஐயா,

தயை செய்து என்னை / எங்களை நமது லக்ஷ்மிக்குச் சந்தா நேயராக / நேயர்களாகச் சேர்த்துக்கொண்டு, இப்பொழுது நடந்து வரும் மலரின் முதல் இதழி லிருந்து ஸஞ்சிகைகளை அனுப்பிக் கொடுக்கவும். சந்தா ரூபாய் மணியார்டர் செய்திருக்கிறேன். / V. P. யில் தபால் செலவு உள்பட அனுப்பவும்.

அன்புள்ள,

(1)..

....

.... (கையெழுத்து).

(2)..

.... கூடுமானல் நேயர்களின்

.... கையெழுத்து.

....

(3)..

....

....

....

(4)..

....

....

....

குறிப்பு :—பெயர்களை மட்டும் இங்கிலீஷில் எழுதினால் மிகவும் நலமா யிருக்கும். தமிழில் எழுதினாலும் சரியே.

குறிப்பு

லக்ஷ்மிக்கு நேயராகச் சேர விரும்புவர்கள் முன் பக்கம் தங்கள் பெயர்களை எழுதி, இதைக் கிழித்துத் தனிக் கவரில் வைத்து, நமது ஆபீஸுக்கு அனுப்ப வேண்டும். இது அல்லாமல் நேயர்களின் சொந்த லெட்டர் அல்லது காகிதங்களிலும் எழுதி அனுப்பலாம். நேயர்கள் சந்தாவுக்கு V. P. யில் அனுப்பச் சொல்லுவதை விட மணியார்டர் செய்தால், எங்களுக்கு சுலபத்தையும், நேயர்களுக்கு தன லாபத்தையும் கொடுக்கும்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

(இந்த இடத்தில் ஆபீஸுக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டிய திருந்தால் தெரிவிக்கலாம்.

தங்க பதக்கம் பெற்றது

வெள்ளி பதக்கம் பெற்றது

என் வயது 14

பாரததேசத்து

பெண்மக்களின் உயர்ந்த பரிமள இரண்டு ஆபரணங்கள்

அத்தர்களின் ராஜா

ஒட்டோமோஹினி

உயர்ந்த மணமும், சுகமும் கொடுக்கக்கூடியது

விலைகள் :—ரூ. 2–0–0 1–4–0 0–12–0
0–10–0 0–8–0 0–2–0

வாஸனை கார்டுகள் 1-க்கு 0—1—0
டஜன் 0—10—0.

ரோபினியா ஆயல்

அத்தர்களின் ஊற்று

கூந்தலுக்கு மிகவும் நல்லது. தலையில் உண்டாகும் சுண்டு முதலியவைகளைப் போக்கி கூந்தலை மிருதுவாகவும் அடர்த்தியாகவும் வளரச்செய்து மூளைக்குக் குளிர்ச்சியுண்டாக்கும்.

புட்டி 1-க்கு ரூ. 1-0-0. 3 புட்டி ரூ. 2-4-0.

பாகிங், தபால் செலவு வேறு.

ஸக்ஸஸ் ஆப் இந்தியா அத்தர் அழகிய கட் கிளாஸ் புட்டி.

கைக்குட்டைக்கு உயர்ந்த பரிமள அத்தர் 1 oz. புட்டி ரூ. 2—8—0

ஸோல் எஜண்டுகள் : —

ஷா. கனிராம் ஜுக்ராஜ் கம்பெனி
தபால் பெட்டி நெ. 1266
மதராஸ்.

பரிக்ஷித்து நன்குணம் கண்டது

பரிக்ஷித்தால் விடமாட்டீர்கள்

வீட்டுக்கு லக்ஷ்மி !

ருக்மணி குக்கர்

சமையல் அடுக்கு

எவ்வீட்டிலும் இந்த மதிப்புயர்ந்த சமையல் அடுக்கு இருக்குமானால், அங்கே லக்ஷ்மி குடிகொண்டு வாசஞ் செய்வாளென்பது திண்ணம்.

நல்லுணவு, புஷ்டியான சாப்பாடு, சுத்த சமையல், சிக்கனவு, தொந்தரவின்மை, சந்தோஷம், திருப்தி, இவையெலாம் வந்தால், லக்ஷ்மி கடாட்சம் நிரம்பி வழியும்.

இந்த உயர்தர அடுக்கு 1, 2, 4, 6, 8 பேர்களுக் குகந்த ஐந்து அளவுகளில் ரூபாய் 13, 18, 22, 27, 33-ல் உண்டு. ரயில் கூலி வேறு. நல்ல கனத்த பித்தளைத் தகட்டினுற் செய்து ஈயம் பூசப்பட்ட பாத்திரங்கள். என்றைக்கும் உழைக்கக் கூடியன.

விபர புத்தகம் இனும். ஏஜெண்டுகள் தேவை.

ருக்மணி குக்கர் கம்பெனி,

இராயபுரம் 1, சென்னைபட்டினம்.

இரண்டே ரூபாய்

கீழ்க்கண்ட புஸ்தகங்கள் பூராவும் ரூ. 2 அனுப்புவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். தேவையுள்ளவர்கள் உடன் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ரூபாய் மணியாடரில் அனுப்பவேண்டும். தனிப் புஸ்தகங்கள் கிடையா.

	ரூ.	அ.
கன்னியா குமாரி அல்லது கலியின் கோலாகலம் ...	1	0
சிறு கதைகள்	0	8
வரலக்ஷ்மி	0	8
வேதவல்லி	0	5
முத்துமாமா	0	4
உறங்கினேன் விழித்தனன் அல்லது காலத்தின் கோலாகலம்	0	4
புருஷனை ஏமாற்றிய புஷ்பவல்லி	0	3
மொத்தம் ரூ.	3	0

ஸாண்டர்சன் அண்டு கோ,

188 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

ஆங்கிலம் கற்றுக்கோள்ள விரும்பும் அன்பர்களே!

நீங்கள் எளிதில் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமானல்,

ஆனந்த ஆங்கில பாஷா போதினி

என்னும் நூலை உடனே வரவழைத்துப் படியுங்கள்.

இது 640—பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது விலை ரூபாய் **2**.

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு **1—8—0**

தமிழ் தெரிந்தவர்கள் அதி சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்; ஆசிரியர் தேவையில்லை; பணச்செலவு அதிகமில்லை. இதற்கு முன் பல ஆங்கில போதினிகள் வெளி வந்திருப்பினும் அவை இதற்கிணையாகமாட்டா.

இது இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்கும் அரிய நூல். இதுவரை வெளிவராத நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து நன்ருகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்து கொள்ளலாம். கிராம முனிசீப்களுக்கும், மணியக்காரர், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பட்லர்க்கும், சிலோன், பினங், சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள தோட்டங்களின் கங்காணிமார்களுக்கும், இங்கிலீஷ் தெரிந்துகொள்ள விரும்பும் மற்ற எல்லோருக்கும் இது மிக்க அவசியமான புத்தகம்.

ஆனந்தபோதினி.

ஓர் உயர்தர அழகிய மாதாந்த தமிழ்ப்பத்திரிகை; 20,000 சந்தாதாரர்களை யுடையது; தமிழ்நாடெங்கும் பிரசித்தியுற்று முதன்மை பெற்றது; 12 ஆண்டுகட்டு முன் தோன்றியது; குறைந்த சந்தாத் தொகையுள்ளது; விவேகத்தை விருத்திசெய்வது, பாஷாபிவிருத்தி, தேசாபிவிருத்தி, ஞானபிவிருத்தி முதலிய அரிய நீதிகளை போதிக்கவல்லது; தமிழ்நாட்டு ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், விருத்தர் குமாரர் முதலிய எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாசிக்கத்தக்கது. மாதிரி காபி இனும்.

வருஷ சந்தா	இந்தியா, பர்மா, சிலோன்,	ரூ. 1-0-0
தபால்கூலி உள்பட	வெளி நாடுகள்	ரூ. 1-4-0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஜெகப் பிரசித்திபெற்ற

ஜிண்டான் மாத்திரையை

இன்றே பரீட்சியுங்கள்

அஜீர்ணம், சுரம், நாவரட்சி, தலைவலி, மயக்கம், மந்தம், சீதபேதி, இராணி முதலிய சகல ரோகங்களையும் போக்கி உற்சாகத்தை யுண்டாக்குவதில் கை கண்டது.

15 pills	1 an.
40 pills	2 as.
65 pills with pill case	4 as.
100 pills (without)	4 as.
200 pills (with fancy pill case)	1 Re.
1000 pills (without)	2 Rs.

சோல் ஏஜண்டுகள் :— எஸ். வைத்தியா & கோ.,

நெ. 201, தேவராஜ முதலி தெரு, பி. டி. மதறாஸ் & திருச்சி.

ஆ ங் கி ல ஆ சா ன்

அல்லது ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700-பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரு. **2**. தபால் செலவு அணு **6.**

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினுல் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

தீபாவளி ! தீபாவளி !!

தீபாவளிக்கு வேண்டும் காசிப்பட்டுத் தினுசுகளுக்கு

எங்களை மறந்து விடாதீர்கள் !

எக்ஸிபிஷன் பட்டுப் புடவை.

இந்தப் புடவை பல பஹிரங்கப் பொருட் காக்ஷி களுக்கு அனுப்பி மதிப்புப் பெற்றது. அழகும் நாணயமும் உள்ளது. நாகரீகமான ஜரிகைப் பூக்கரையும், அழகான ஜரிகை முகதலையு முள்ளது. எல்லா விதமான கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் × 44 இஞ்சு புடவை 1-க்கு ரூ. 60
18 ,, × 44 ,, ,, ரூ. 75

கிளாவர்க்கரை பட்டுப் புடவை.

இந்தப் புடவையின் உடல் சாதா; விளிம்புக் கரைகளுக்கு ஜரிகையினுல் "கிளாவர்" மாதிரி நெசவு செய்து இருக்கும். முக தலைக்கு ஜரிகைப் பட்டைக் கரை யுள்ளது. நாகரீகமாயும், அழகாயு மிருக்கும். சிறிய கரைகளுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேக மில்லை. அழுத்தமும், பளபளப்பும், நாணயமுமான உடை. கலர்கள் :—வெள்ளை, வெங்காய வர்ணம், கத்திரிப்பூ வர்ணம், ஆகாச வர்ணம், சந்தண வர்ணம், பூ நீலம், ஸ்நவ், சாக்ளட், கறுப்பு முதலிய பலவித கலர்களில் உண்டு.

16 முழம் × 44 இஞ்சு புடவை 1-க்கு ரூ. 38
18 ,, × 44 ,, ,, ரூ. 44

கே. எஸ். முத்தையா & கோ.
சில்க் ஹவுஸ், காசி.

---

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555,
வண்ணுரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதிசிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A. S.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்

"திருப்தியில்லாவிடில்" பணம் வாபீஸ்

இனும்! அழகிய 5-விதமான சாமான்கள் இனும்!!

பாரிஸ் லேடிகளின் அழகிய கலர்

பெட்ரூம் போடோ படங்கள்.

இதை பார்ப்பவர் மனம் பரவசப்படுத்தி ஆண் பெண் இருவருக்கும் ஆனந்தம் கொடுக்கும் பாரிஸ் மாதரின் அழகும், இன்னு மற்ற விநோதமும் இதில் காணலாம். இவைகளை பெட் ரூம்களில் அலங்கரித்தால் சுந்தரமா யிருக்கும் 1 டஜன் 12 விதமான போடோ படங்கள் விலை ரூபா **3**.

குறிப்பு:—இனும் சாமான்கள் விபரம். உயர்ந்த பவுண்டன் பேனா 1 தந்த சீப்பு 1 கைகுட்டை 1 சென்டுபுட்டி 1 முகம் பார்க்கும் கண்ணாடி 1.

மேல்கண்ட இனும் சாமான்கள் இல்லாமல் 12 ரகமான முழுசெட் அடங்கிய 1 டஜன் போடோ படங்களின் விலை ரூபா **2**. தாபால் சார்ஜ் வேறு.

வெளிதேசத்தார் முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

எம்விலாசம்:— ஒலிம்பியா ஸ்டோர்ஸ்.

பார்க்டவுன், மதராஸ்.

எது வேண்டும்?

		ரூ.	அ.
ஆங்கில ஆசான்	...	2	0
ஆங்கில பாஷா போதினி	...	2	0
ஆங்கில போதகன்	...	2	0
இங்கிலீஷ் உபாத்தியாயர்	...	1	8
ஆங்கில ஆசிரியன்	...	1	0

வாஸன் புஸ்தகசாலை

97, அண்ணாபிள்ளைத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு மருந்தே தேவை இராது.

மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்ற தென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம், புளியேப்பம், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால்பிடிப்பு, வாய்வு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள் குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேசமெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக்கு இனும்!!
புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை: அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட்மார்க் உள்ளது.

விலாசம் :—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,
சேலம் (S. I.)

F. M. S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,

மெஸர்ஸ் :
ஆர். இ. முகம்மது காசீம் & கோ,
கிளாங், பினாங், சிங்கப்பூர்.

...ழ்நாடு ஆவணக்...
சென்னை 600 0..
310300

குறைந்த விலை விற்பனை - -

- - - ஒரே மாதந்தான்!!

"Keep-cool" வலை பனியன்கள். கோடைகால உபயோகத்திற்கு இன்றியமையாதது. பட்டைப்போல் மிருதுவான நூலில் தயார் செய்யப்பட்டது.

சயிஸ்	28″	30″	32″	34″
விலை	0-14-0	1-0-0	1-2-0	1-4-0

"Popular" டுயில் ஷர்ட். உசத்தி வெள்ளை டுயிலில் தயார் செய்யப்பட்டது. பால் போன்ற வெள்ளை. சலவைக்கு வெகு நேர்த்தியா யிருக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

ஷர்ட்டு 1-க்கு விலை ரூ. **1-12-0** தான்.

"Everlasting" காக்கி ஷர்ட். மிகவும் உயர்ந்த துணி, பட்டைப்போல், ரொம்பவும் மிருதுவானது. அழகான தையல், இன்றே (கழுத்தளவுடன்) ஒன்றுக்கு ஆர்டர் செய்து பாருங்கள்!!

விலை ஷர்ட் 1-க்கு ரூபா **2.**

ஸ்பெஷல் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

POST BOX 99. MADRAS

Show room: 287, Esplanade. Phone: No. 2693.

தீபாவளி ! தீபாவளி !!

தமிழ் நாட்டவர்களுக்கு முக்கிய நாளும்
வருஷத்திற்கு ஒரு நாளுமான

தீபாவளி பண்டிகை

வரப்போகிறது.

தீபாவளிப் பண்டிகைக்கு வேண்டும் காசி, காஞ்சி, மாயவரம், சேலம் முதலிய ஊர், பட்டு நூல் தினுசுகளுக்கு இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

எமது "ஸ்பெஷல்" கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

இவ் வருஷம் பட்டு நூல் ஜவுளிகளின் விலைகள் மிகவும் மலிந்திருப்பதால், கடந்த வருடங்களைப் போல, அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை.

இன்றே தங்களுக்கு வேண்டும் தினுசுகளுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

POST BOX 99. MADRAS

Show room : 287. Esplanade. Phone : No. 2623.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.